www.padippakam.com

ஈழ தேசம்

மலர்-1 ஜனவரி, 1996 இதழ்-5

# சந்திரிகாவின் கருணை உள்ளம்

யாழ்ப்பாணம் சிங்களப் படையினரால் கைப்பற்றப்பட்டதும் அதனை அமைதியான முறையில் சிங்கள மக்கள் கொண்டாட வேண்டும். தமிழ் மக்களுக்கு எந்த விதத் தீங்கும் விளைவிக்கக் கூடாது, அவர்களது மனமும் நோகக்கூடாது என்று சிங்களக் காடையர்களுக்கு அறிவுரை கூறி கொழும்புக் கடைகளில் இருந்த பட்டாசுகள் தீரும் வரை வெற்றியின் கொண்டாட்டம் அமைய வழி செய்தார்.

சிங்களப் புது வருடம் வெசாக் மற்றும் தேர்தல்களில் வெற்றி பெற்றால் ஒட்டுமொத்தமாகப் பட்டாசுகள் தீர்ந்து போகாது. ஆனால் சிங்கள இன்மே இதனைக் கொண்டாடியதனால் தீர்ந்தது பட்டாசுகள். கொழும்பிலிருக்கும் தமிழ்க் குழுக்களும் சந்திரிகாவைப் பற்றி பெருமையாகவே பேசினர். தமிழ் மக்களுக்கு எதிராகவோ, மனம் புண்படும் படியாகவோ, யாரும் நடக்கக்கூடாது என்று உத்தரவே போட்டு விட்டார்! இப்படி யாராவது செய்திருக்கிறார்களா? ''இப்படியான கருணையுள்ளம் யாருக்காவது இருக்கிறதா''? என்று காண்பவர்களிடம் கூறிப் பெருமை பேசிக் கொண்டனர்.


சந்திரிகாவின் யுத்தகோசங்கள் பல வகைகளில் இருந்தது.

1. பயங்கர வாதத்திடமிருநது யாழ்ப்பாண மக்களை மீட்பது
2. பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தம்.
3. சமாதானத்திற்கு எதிரானவர்களுக்கு எதிரான யுத்தம்.

தமிழ் மக்களைத் திருப்திப்படுத்த பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பு; அவரை அண்டி வாழும் தமிழ்க் கட்சிகளுக்கு பயங்கரவாதத்திற்கு (புலிகளுக்கு) எதிரான யுத்தம்; உலக நாடுகளுக்கு சமாதானத்திற்கு எதிரானவர்களுக்கு எதிரான யுத்தம் இவை மூன்றும் முன் வைக்கப்பட்ட அவரது நியாயங்கள். ஆனால் சிங்கள மக்களுக்கு என்ன சொல்லியிருப்பார் என்று எண்ணத் தோன்றும், அது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்பதே.

சந்திரிகா என்றும் சிங்களப் பேரினவாதத்திற்கு அப்பாற்பட்ட பெண்ணல்ல. தமிழ் மக்களுக்கு எந்தத் தலைவர் அதிகமான தீங்கு விளைவிக்கிறாரோ அவர் பக்கம் தமது ஆதரவினை அள்ளி வழங்கியுள்ளனர் சிங்கள மக்கள். யு.என்.பி ஆட்சியின் அராஜக நடவடிக்கைகளை எடுத்துக்காட்டி அதன் மூலம் தன்னை ஓர் காருண்யம் படைத்த பெண் என்று அனுதாபம் தேடித்தான் ஆட்சியில் வந்து சேர்ந்தார்.

சிங்களப்படை யாழ்ப்பாண மண்ணில் இறங்கியபோதே அமைதியான குணம் படைத்த தமிழ் மக்களை விடுதலைப்புலிகளாகிய பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கவே இந்த யுத்தம் என்று சந்திரிகா பிரகடனப்படுத்தினார். யாழ்ப்பாணக் கற்குவியல்களின் நடுவே சிங்களக்கொடியை ஏற்றி வைத்ததும் இதே சந்திரிகா, சிங்கள மக்கள் தமிழரை இடைஞ்சல் படுத்தாமல் யுத்த வெற்றியினைக் கொண்டாட வேண்டும் என்று சொன்னார்.


The Award Winning Weekly
FREE CIRCULATION
Newslanka
AIRLANKA £430 FAMILY FARES AVAILABLE ELEANOR TRAVEL LTD 0181 741 7993
COL-LON-COL from £530 (Return) Ticket valid for one year KLM £380 ELEANOR TRAVEL LTD 0181 741 7993
Registered at the Post Office as a Newspaper
SATURDAY DECEMBER 2,1995 NEWS DESK & ADS TEL: 0181 208 2649 ISSUE 208
End of this war does not mean peace – President
'Celebrate, but don't harass Tamils'
President Chandrika Bandaranaike Kumaratunga in an address to the nation said the first phase of the battle for peace was on the verge of being concluded and requested the people to celebrate the victory calmly and peacefully.
Bouquet for Anuruddha from Chandrika
Mahattaya executed: Balasingham
Security at Parliament
Tamil parties help fight LTTE
SRI LANKA

பயங்கரவாதிகளிடமிருந்து வெற்றிப் பெற்றிருந்தால் தமிழர்கள் உட்பட நாட்டு ,மக்கள் அனைவரையுமல்லவா வெற்றி விழா கொண்டாடச் சொல்லியிருக்க வேண்டும். இதற்கு மாறாக ''தமிழருக்கு தொந்தரவு கொடுக்காமல் சிங்களவர்கள் போர் வெற்றியைக் கொண்டாட வேண்டும்'' என்று சொன்னால் என்ன அர்த்தம்? இது சிங்களப் பேரினவாத அரசு தமிழருக்கு எதிராக நடத்திய யுத்தம் என்றுதானே அர்த்தம். இதை கொழும்பில் சிங்கள அரசின் பாதுகாப்பிலும் கவனிப்பிலும் வாழும் தமிழ்க் கட்சிகள் ஆதரவு கொடுத்து வரவேற்பதில் என்ன ஆச்சரியம்?

ஆனால் இந்த இனவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் சொல்லிவரும் இத்தகைய பச்சைப் பொய்யை உலக மக்கள், அறிவாளி'களாக தம்மைப் பட்டங்கட்டிக் கொண்டோர், சில பெரிய பத்திரிகையாளர் என்போர் முற்றாக நிராகரிக்க வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

## பௌத்த மகா சங்கத்தின் தீர்மானங்கள்

இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்பாக சிங்கள பௌத்த மகா சங்கம் சென்ற வாரம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்தது. அவ்வறிக்கையில், 'நாம் யுத்தத்திற்கு மட்டுமே முழு ஒத்துழைப்பு வழங்குவோம். சமாதான நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு வழங்கப் போவதில்லை. சமாதான தீர்வுத் திட்டம் என்பது தற்போது தேவையற்ற ஒன்று. மீட்கப்படாமல் இருக்கும் தமிழீழப் பிரதேசங்கள் அனைத்தும் மீட்கப்பட வேண்டும். எமது இராணுவம் வலிமையான நிலையில் உள்ளது. யுத்தம் மூலம் இலங்கையின் முழுப் பிரதேசமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த பின்னரே தற்போதைய பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும்,' என்று கூறப்பட்டுள்ளது.



சந்திரிகா அரசின் தூண்டுதலின் பேரில்தான் இதுபோன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. 1956, 1958, 1977 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இனக் கலவரங்களின் பின்னால் இந்தச் சங்கம்தான் இருந்தது. இந்தச் சங்கம் பௌத்த மகா ரவுடிகள் சங்கமே அல்லாமல் புத்தரின் அகிம்சையைப் போதிக்கும் சங்கமல்ல.

இலங்கை அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள அபிவிருத்தி லொத்தர் நம்பிக்கை நிறுவனத்தினரால் இலவசமாக வெளியிடப்பட்டுவந்த நாட்காட்டிகள், நாட்குறிப்புகள் இதுவரை காலமும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு வெளிவந்தன. ஆனால் இம்முறை அனைத்தும் தனிச் சிங்கள மொழியில் மாத்திரம் வெளிவந்துள்ளன.

மேலும் இலங்கை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தமிழ் சித்திரப் பாடத்திற்குரிய பாடவிதானம் முழுக்க முழுக்க சிங்களக் கலாச்சாரத்தைத் தழுவியதாகவே உள்ளது. தமிழ் மொழி பெயர்ப்பே இல்லாமல் சிங்கள சொற்களும் சிங்கள மன்னர்களின் சிற்பங்கள் மட்டுமே உள்ளது. மொழி பெயர்ப்பதில் தமிழ் ஆசிரியர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

## சேலம் அகதி முகாம்களில் 800 குடும்பத்தினர் அவதி

சேலம் மாவட்டத்தில் உள்ள பவழத்தானூர் மேல் முகாம், பவழத்தானூர் ஏரிமுகாம், குறுக்குப் பட்டி முகாம், அத்திக் காட்டானூர் முகாம், ஆகிய நான்கு அகதிகள் முகாம்களுக்கும் கடந்த இரண்டு மாதங்களாக வழங்கப்படவேண்டிய உதவித் தொகை எதுவும் அரசு அதிகாரிகளால் வழங்கப்படவில்லை.

இந்த நான்கு முகாம்களைச் சேர்ந்த சுமார் 800 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் ஒரு வேளை உணவுக்கே திண்டாடுகின்றனர். குழந்தைகள் பசியினால் துடிப்பதைக் கண்டு பெற்றோர்கள் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு எதைத்தான் செய்ய முடியும்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் வேளையில் தான் இது போன்று செய்து பசியாலும், பட்டினியாலும் தங்கள் நாட்டுக்கே சென்று விடுவார்கள் என்று அதிகாரிகள் இப்படிக் காலம் தாழ்த்தி உதவித் தொகையை வழங்கினார்கள். திருப்பி அனுப்புவதில்லை என்று அரசு தீர்மானித்த பின்னரும் ஏன் எங்கள் மக்களை இப்படிப் பட்டினி போட்டு அதிகாரிகள் வாட்டி ரசிக்கின்றனர் என்பது தான் புரியவில்லை. அதிகாரிகளை மனமிரங்கவைக்க அகதிகள் என்னென்ன அனுசரணைகள் செய்ய வேண்டும் என்று அரசு ஓர் சுற்றறிக்கையை அனுப்பினாலாவது அகதிகள் அதற்கேற்றவாறு செயல்படுவார்கள். யாரிடம் சொல்லி அழுவது எங்கள் வாழ்வுபற்றி என்று கண்ணீர் மல்கக் கூறினர் அந்த மக்கள்.

**ஈழ மக்களின் இதயக் குரல்**

www.padippakam.com



# அகதிகள் பக்கம்

## இவர்களும் மனிதர்களே



பா. இராஜரத்தினம்

கடந்த பல ஆண்டுகளாக இலங்கை அரசப் படைகள் தமிழ் மக்கள் மேல் திட்டமிட்டு நடாத்தி வரும் இன ஒடுக்குமுறை யுத்தத்தால் தங்கள் உறைவிடங்களை, உடமைகளை, சொந்தபந்தங்களை இழந்து சொந்த நாட்டிலும், இந்தியா உட்பட இன்னும் பல ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். இது போன்று இன ரீதியாக, மத ரீதியாக, கலாச்சார பொருளாதார வேறுபாட்டால் வன்முறை ஒடுக்குமுறைகளை தாங்க முடியாமல் உரிய பாதுகாப்புத் தேடி பல அண்டைய நாடுகளில், உலகின் பல தரப்பட்ட மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு அரசியல் உரிமைகள் தவிர்த்து அந்த நாட்டின் பிரஜைகளுக்கு உள்ள உரிமைகள் அகதிகளுக்கும் வழங்கப்படுவதே மனிதநேயக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டின் அடிப்டையில் அகதிகளின் நலனில் அக்கறைக் கொண்டு அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக ஐக்கிய நாட்டு சபையின் ஒரு அங்கமான ''அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர்'' (UNHCR) செயல்பட்டு வருகிறது.

அடைக்கலம் தேடி சொந்த நாட்டை விட்டு வேறு நாடுகளில் தஞ்சம் புகும் மக்கள் பாதுகாப்புடனும், துன்புறுத்தலுக்கு ஆளாகாமலும் வாழ்வதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர்களினால் தீர்மானிக்கப்பட்டு ஐக்கிய நாட்டு சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடாகும். அகதிகள் அடிமைகளோ அல்லது கள்ளக்குடியேற்றக்காரர்களோ அல்ல. அவர்களுக்கும் உரிமைகள் உண்டு. அவை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் - உயர் ஸ்தானிகர் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் அகதிகள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக அகதிகள் ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் சாசனத்தில் உள்ளவை யாதெனில்,

அகதிகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களைக் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பக்கூடாது என்பதாகும். அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் சாசனத்தின் இல-18 (XXXI) பிரிவு இதனை உறுதிபடக்கூறுகிறது. அந்தப் பிரிவில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதவை:-

1. அகதிகள் பிரச்னைக்கு சரியான தீர்வு என்னவெனில், நாடு சுதந்திரம் அடைந்ததும் பொதுவாகவும் குறிப்பாகவும் அகதிகள் சுய சம்மதத்துடன் நாடு திரும்புவது தான்.
2. சுய சம்மதத்துடன்தான் திருப்பி அனுப்பப்பட வேண்டும் எனும் விதி மதிக்கப்பட்டு வற்புறுத்தப்பட வேண்டும்.
3. தனி நபராக இருந்தாலும் சரி கூட்டாக இருந்தாலும் சரி சுய சம்மதத்துடன் நாடு திரும்புவர்கள் விரும்பும் ஒழுங்குமுறைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அவசியம் ஏற்படும்போது UNHCR ஐ இணைத்து செயல்பட வேண்டும்.
4. அகதிகள் நாடு திரும்ப சுய சம்மதம் தெரிவிக்கும்போது, தஞ்சம் கொடுத்த நாடும் அவரின் சொந்த நாடும் அந்தந்த நாட்டின் சட்டத்துக்கமையவும் அவசியம் ஏற்படும்போது UNHCR யின் அனுசரனையுடனும் அவர்களுக்கு உதவும் வகையில் தேவையானவற்றைச் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
5. அகதிகள் நாடு திரும்புவது தொடர்பான தீர்மானத்துக்கு வருவதற்கு சொந்த நாட்டின் நிலவரம் குறித்து அவர்களுக்கு அவசியமான தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும். மேலும் அகதிகளின் பிரதிநிதியோ அல்லது அகதி நேரடியாகவோ சொந்த நாட்டுக்கு சென்று நிலைமைகளை நேரில் தெரிந்து கொள்ளலாம், அப்படி சென்று பார்ப்பதால் அகதி அந்தஸ்தை இழக்க நேரிடாமல் இருப்பதற்கு இது உதவும்.
6. நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதோடு, என்ன காரணத்திற்காக நாட்டை விட்டு அகதியாக வெளியேறினரோ அந்தக் காரணத்திற்காக தண்டிக்கப்படக்கூடாது என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. நாட்டில் நிலவும் நிலவரம் குறித்து அகதிகளுக்கு அவர்கள் நாட்டின் அரசாங்கம் வழங்கும் தகவல்களும், அறிவித்துள்ள சலுகைகளும் உண்மையானவைதானா என்று அடைக்கலம் கொடுத்த நாடு உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்தான் அடைக்கலம் கொடுத்த நாட்டின் அதிகாரிகள் அகதிகள் நாடு திரும்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு UNHCR ம் இணைத்து செயல்பட வேண்டும்.
8. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தையும் திரும்பும் அகதிகளின் நிலைமையையும் கண்காணிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பேரில் UNHCR அழைக்கப்படலாம்.
9. திரும்பும் அகதிகளுக்கு அவசியமான கடவுச்சீட்டுகளும், விசாக்களும் பயணத்திற்கான போக்குவரத்து வசதிகளையும் சம்பந்தப்பட்ட நாடுகள் செய்து கொடுக்க வேண்டும். அகதிகள் தங்களின் பிரஜா உரிமையை இழக்கும்பட்சத்தில் அதனை மீண்டும் அடைய வழிவகை செய்யப்பட வேண்டும்.
10. நாடு திரும்பும் அகதிகளை பொறுப்பேற்று அவர்களின் நாட்டில் மறுவாழ்வுக்கான திட்டங்களை அமல் செய்யவும் அவசியமான சந்தர்ப்பங்களில் அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகரின் கூட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுய சம்மதத்துடன்தான் அகதிகள் திரும்பி அனுப்பப்பட வேண்டும் எனும் 1980ன் தீர்வின் அடிப்படை சர்வதேச சட்டத்தையும் அதன் நடைமுறையும் பிரதிபலிக்கவும் மீள உறுதிபடுத்தும் வகையிலும் பின் வரும் தீர்வுகளும் இதன் தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

1. சுய சம்மதத்துடன்தான் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற அடிப்படை மனித உரிமையை மீள உறுதிபடுத்தியும் அதனை மேலும் அபிவிருத்தி செய்யவும் சர்வதேசம் ஒத்துழைப்பு - நல்க வேண்டும்.
2. நிர்பந்தமில்லாத சுய சம்மதத்தின் பேரில் மட்டுமே அகதிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும். சுய சம்மதத்துடன் அனுப்பப்படுபவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அகதிகள் அவர்களின் நாட்டில் பெரும்பாலும் அவர்கள் வகித்த இடங்களுக்கே அனுப்பப்பட வேண்டும் என்பதற்கு மதிப்பளிக்க வேண்டும்.
3. தன் பிரஜைகள் சுய சம்மதத்துடன் நாடு திரும்புவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அடைக்கலம் கொடுத்த நாடும் இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். சுய சம்மதத்துடன் திருப்பி அனுப்புவதற்கு ஆதரவாக சர்வதேசம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உலக அளவிலாக இருந்தாலும் சரி, பிரதேச அளவிலாக இருந்தாலும் சரி சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளும் முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டும். அகதிகளின் பிரச்சனைக்குத் தீர்வாக அவர்கள் சுயசம்மதத்துடன் திரும்பிச் செல்வதை ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்தத் தீர்வுக்கு அவசியமான அரசியல் நடவடிக்கையை அந்த நாடு மேற்கொண்டு அகதிகள் திரும்புவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். இது அந்நாட்டின் முதன்மையான பொறுப்பாகும்.
4. (UNHCR) யு.என்.எச்.சீ.ஆர்.) உயர் ஸ்தானிகரின் மனிதாபிமான நடவடிக்கையை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டு, அதனை மதித்து, அகதிகளுக்கான பாதுகாப்பிற்காகவும் அகதி பிரச்சனைக்கான தீர்வுக்கும் அவர் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைக்கும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும்.
5. அகதிகள் திருப்பி அனுப்பப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நிலைமை உகந்ததா இல்லையா என்று கணிப்பிடுவதிலும், அதன் பின் திட்டமிடல் நடைமுறைப்படுத்துதல் ஆகிய கட்டங்களிலும் ஆரம்பம் முதல் உயர் ஸ்தானிகர் சம்பந்தப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒரு குறிப்பிட்ட அகதி குழு திரும்பிப் போவதில் கடுமையான பிரச்சனை இருப்பதாக உயர் ஸ்தானிகர் கருதுவாரானால், அந்தக் குறிப்பிட்ட பிரச்சனைக்கு ஆலோசனை குழு ஒன்றினை தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் ஆலோசித்தப் பின் நியமிக்கப்படும். அவசியம் ஏற்படின் செயற்குழுவில் அங்கம் வகிக்காத உறுப்பு நாடுகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்படலாம். அத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட நாடுகள் சேர்த்துக் கொள்ளப்படும். உயர் ஸ்தானிகர் ஐக்கிய நாட்டு சபையின் வேறு அங்கங்களின் உதவிகளை பெறும் தீர்மானத்தையும் எடுப்பார்.
7. நாடு திரும்பியவர்களின் நிலையை கண்காணிக்கும் சட்ட ரீதியான அதிகாரம் உயர் ஸ்தானிகருக்கு இருப்பதாக அங்கிகரிக்க வேண்டும். குறிப்பாக பொதுமன்னிப்பு வழங்குவதிலும், வேறு சலுகைகள் வழங்கியதின் பெறு பேறுகளில் தலையிடுவதற்கு சட்டரீதியான அதிகாரம் உயர் ஸ்தானிகருக்கு இருப்பதாகக் கொள்ளல் வேண்டும். சம்பந்தப்பட்ட நாடுகளுடனான ஆலோசனையின்போது எடுத்த தீர்மானத்துக்கு அமைய உயர் ஸ்தானிகருக்கு நேரடியான தடங்கலற்ற அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் பொதுமன்னிப்பு, உத்தரவாதம், உறுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடு திரும்பிய அக்திகளுக்கு அவை நிறைவேற்றப்படுகிறதா என்று கண்காணிக்க முடியும். இது நடைமுறையில் இருக்கும் அதிகாரமாக கொள்ளல் வேண்டும்.

## கூத்தர் சிரிக்கிறார்

### பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலும்

அதி உன்னத அம்மையாருக்கு தன் செல்வாக்கை நிருபிக்க பிரேமமான தலைவர் பழைய உறவை அசை போட்டுக் கொண்டு டெல்லி போனாராமுங்கோ. பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலும் காட்டும் இரட்டை வேடத்தை புரிஞ்சு கொண்ட டெல்லி, பார்க்க மறுத்திட்டினமாம். நொந்து போன இவர் வெளியே சொன்னா அவமானம் பாருங்கோ அதனால் போகிற போக்கில் நாலு பேரை கூப்பிட்டு தமிழர் பிரச்சனையில் இந்தியா தலையிட வேண்டும் எண்டு சொல்லிப் போட்டு மீண்டும் அம்மையாரிடமே போயிட்டாருங்கோ.



போராட்டங்கள் வெறும் சம்பவங்கள் அல்ல அவை சரித்திரங்கள் படைக்கின்றவை.

படிப்பகம்

www.padippakam.com





# உன் அடிச் சுவட்டில் நானும்

சில பெண்கள் உணவருந்தும் ஹாலில் அவர்களோடு தான் சாப்பிட வேண்டும் என்றும் வாதாடினார்கள். அவர்களுடைய கருணைமிகுந்த இரக்கத்தைக் கண்டு, நீண்ட நாட்களுக்குப் பிறகு உறவினர்களுடைய வீட்டிற்குச் சென்றதைப் போலவே உணர்ந்தேன். சகோதரி 'எக்ஸ்' என் அருகில் அமர்ந்திருந்தாள். என் காதருகே குசுகுசுவென்று பேசினார். "உனக்கு ஏதாவது தேவைப்பட்டாலோ அல்லது கவலையாக இருந்தாலோ எங்களிடம் சொல்லு; நாங்கள் நிச்சயமாக உன்னைப் பாதுகாப்போம், உதவி செய்வோம். நீ நன்றாக இருக்க வேண்டும். உடல்நிலை நன்றாகத் தேற வேண்டும், அப்பொழுதுதான் ட்ராயைச் சந்தித்ததாகக் கூறினார்.

"அவரை எங்கே சந்தித்தீர்கள்? அவர் எப்படி இருக்கிறார்?" என்றேன் அவசரமாக.

சோற்றுக் கவளத்தை விழுங்கிக் கொண்டே, மெதுவாகக் கூற ஆரம்பித்தார்.

"சன்னல் வழியே குதித்து காலை முறித்துக் கொண்ட பிறகும், போலீஸ்காரர்கள் ட்ராயை அடித்திருக்கிறார்கள். அதன் பிறகுதான் அன்று மாலை சோரே ஆஸ்பத்திரி கைதிகள் வார்டுக்குக் கொண்டு வந்தார்கள். அதே ஆஸ்பத்திரியில் இருந்த பெண் கைதிகள், யாரோ ஒருவரை கால் முதல் தலைவரை வெள்ளைப் போர்வையால் மூடித் தூக்கிக்கொண்டு வந்ததைப் பார்த்தோம்.

எங்கள் அறைக் கதவிற்கு முன்புதான் அந்த ஆளைக்கிடத்தி வைத்திருந்தார்கள். அந்த ஆள் மிகவும் இளைஞர்; இருபது வயதுதான் நிரம்பியிருக்கும், அதற்கு மேல் இராது. அவருக்குக் காவல் இருந்த காவலாளி மூலம் இன்னும் கொஞ்சம் செய்திகளைச் சேகரித்துக் கொள்ள முடிந்தது. அவன், "இவர்தான் மக்நாராவைக் கொல்ல முயற்சி செய்தவர்" என்று சொன்னான். உடனே, அங்கேயே நாங்கள் அனைவரும் அவருக்கு உதவி செய்ய ஓடினோம்; போலீஸ் எங்களை அடித்துத் துரத்தியது. கடைசியில் எங்களில் ஒருவரை மட்டும் வெளியே விட்டார்கள். எங்கள் பிரதிநிதி அந்த இளம் வீரனுடன் பேச முயன்றாள். ஆனால் அவரோ சுயநினைவின்றியே கிடந்தார். அவரது கண்கள் தூங்குவதைப் போலவே இருந்தது. மூச்சும் சீரான முறையில் இருந்தது. காவல்காரர்கள் சாப்பிட்டு விட்டு வரும்வரை போலீஸ்காரர் காத்திருந்து, பிறகு ஒரு 'செல்'லுக்குள் அடைந்து விட்டுச் சென்றார்கள். அன்றைக்கு இரவு ஒன்பது மணிக்கு, திரும்பவும் போலீசார் ஒரு 'வானில்' ஏற்றி வேறு எங்கேயோ ட்ராயை அழைத்துக் கொண்டு சென்று விட்டார்கள். வாயிலில் இருந்த ஒரு காவலாளியை மிகவும் வற்புறுத்தி அவரைக்கொண்டு செல்வதற்கான காரணத்தைக் கேட்டோம். தலையை அசைத்துக்கொண்டே அந்தக் காவலாளி "இந்த வியட்காங் ஒரு பயங்கரவாதி, பட்டப்பகலில் தப்பிச் செல்லும் நோக்கத்தோடு சன்னல் வழியாகக் குதித்திருக்கிறார். ஆனால் கால் ஒடிந்து போச்சு. இங்கே கொண்டு வந்தார்கள். கொஞ்சநேரம் கழித்து விருப்பத்தோடு அறைக்குள் இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் திடீரென்று சன்னல் வழியே என்ன செய்கிறார் என்று எட்டிப் பார்த்தால் கட்டுகளை எல்லாம் அவிழ்த்துவிட்டு மறுபடியும் தப்பிக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார், என்றால் பாருங்களேன். இப்பொழுது கடுமையான காவலுள்ள இடத்திற்குக் கொணடு செல்கிறார்கள். அவர் மட்டும் தப்பிப் போய் விட்டால், நாங்கள் எல்லாரும் சிறைக்குள் இருக்க வேண்டியதுதான்!"

"இரண்டு நாட்களுக்குப் பிறகு, அவருடைய போட்ஸ் காவலர்களிடம் ஓடினோம். அவரைப் பற்றிச் சில செய்திகளை அவர்கள் கூறினார்கள். அன்று நடுச்சாமம் சோரே ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு செல்லப்பட்டார். அவருடைய புதிய சிறையைப் பார்வையிட அரசாங்க கொலைகாரக் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் வந்தார்கள். ஒரே நாளில் இரண்டாம் முறையும் ட்ராய் தப்பிச் செல்ல முயன்றதைக் கேட்டு அவர்கள் நிலைகுலைந்து போய் விட்டார்கள். ஒரு கால் ஒடிந்து விலங்கிடப்பட்டு, உடலெல்லாம் காயமடைந்து இருந்தபோதிலுங்கூட ட்ராய் தன்மானத்தை ஒரு போதும் விட்டுக் கொடுக்கவேயில்லை. 'காட்டுமிராண்டி'க் கூட்டத்தினரின் வீசிய ஒவ்வொரு அவமதிப்புக்கும் ட்ராய் சுடச்சுடப் பதிலடி கொடுக்கத் தவறுல்லை. கூரிய நாவிலிருந்து புறப்பட்ட சொற்கள் அவர்களைத் திணறடித்தது. அந்தக் காட்டு மிராண்டிக் கும்பல் ட்ராயைப் பற்றி தாறுமாறான அவதூறுகளை மிக அசிங்கமாகப் பேசினர். ட்ராய் கம்யூனிஸ்டுகளால் தூண்டிவிடப்பட்ட சதிகாரர் என்றும் பயங்கரவாதி என்றும் குறறம் சாட்டினார்கள். இதற்கும் ட்ராய் சரியான முறையில் முகத்திலடித்தாற் போல் பதில் கூறினார்.

"யாருக்கும் கம்யூனிஸ்டுகள் தீங்கிழைத்ததாக நான் இதுவரை பார்த்ததே கிடையாது. ஆனால் அதற்கு நேர்மாறாக என்னுடைய சிறு வயதிலிருந்து பார்த்து வருகிற கொடுமை என்னவென்றால், அமெரிக்கப் போர்வெறியர்கள் நாளுக்கு நாள் இங்குவந்து இறங்கிய வண்ணம் இருக்கிறார்கள். சைகோன் நகரின் வானம் எப்பொழுதும் இவர்களது விமானங்களின் இரைச்சலை எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. அவர்கள் தான் குண்டுகளாலும், துப்பாக்கிகளினாலும் மக்களைக் கொண்டிருக்கிறார்கள்".

பிறகு ட்ராய் மிகக் கேலி நிறைந்த குரலில். "ஏ! கயவர்களே என்னைக் கம்யூனிஸ்ட் ஏஜண்ட் என்று அழைப்பீர்களானால், அதனை மிகப்பெருமையாகக் கருதுக்றேன். கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் மக்களின் நன்மைக்கே உழைக்கிறார்கள். அமெரிக்கர்களின் கூலிகளே! நீங்கள்தான் வெட்கித் தலைகுனிய வேண்டும்" என்றார். அன்றைக்கு இரவு இந்தக் காட்டுமிராண்டிக் கூட்டம் ட்ராயிக்குக் கடுமையான போலீஸ் காவல் போடும்படி உத்தரவிட்டார்கள். மீண்டும் அவர் தப்பிச் செல்ல முயல்வார் என்ற பயம் அவர்களை விடவில்லை. அமெரிக்க முரடர் கும்பல் பக்கத்தில் நின்றாலும்கூட ட்ராய் தன்னைச் சுற்றி நின்ற போலிசாருக்குக் கேட்கும்படி அரசியல் நிலைமையை எடுத்து விளக்கிக் கூறினார். போலீசார் ஒருவர் ட்ராயிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார். அவர் ட்ராயைப் பற்றி ஒருமுறை என்னிடம் கூறினார். "ட்ராய் என்னுடன் பேசும்போது அவரது குரல் மிக நாகரிகமாக, பெரிந்தன்மை வாய்ந்ததாக இருக்கும். அமெரிக்க முரடர் கும்பலுக்கு பதிலடி கொடுக்கும் போது அவரது குரல் இருப்பதைப் போல கடுமையாக இராது" என்றார்.

ட்ராய் குடிப்பதற்கு தண்ணீரும், உடலை துடைத்துக் கொள்ள நனைந்த துண்டும் கொடுத்து உதவினாராம் அந்தப் போலீஸ்காரர்.

சிறையின் முன் முற்றத்தில் வெய்யிலில் காய பெண்கைதிகளையெல்லாம் வெளியே சென்று உட்கார அனுமதித்தார்கள். எங்களைப போனற இளம்பெண்களுக்கு வெய்யிலில் காய வெளியே அனுப்புவதும், சில்லறை வேலைகளுக்குச் செல்வதும், சகோதரி 'எக்ஸ்'ஸிடம் பேசுதற்குக் கிடைக்கும் அருமையான சந்தர்ப்பங்களாகக் கருதுவோம். அல்லது ஏனைய கைதிகள் தாங்கள் அறிந்த போராட்டங்களைக் கூறவும், கேட்கவும் வாய்ப்பாகும். சகோதரி 'எக்ஸ்' பல சிறைகள் பார்த்தவர். பூமிக்கடியில் அமைக்கப்பட்ட இருட்டறைகளில், தனிமைச் சிறையில் பல காலம் கழித்தவர், அவளுடைய கணவனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அதுவும் நிறைவேற்றப் பட்டுவிட்டது என்றுதான் தெரிகிறது. இருந்த போதிலும் எங்கள் கூட்டத்திலேயே அவர்தான் மகிழ்ச்சிக்கும், தன்னம்பிக்கைக்கும் ஊற்றாக இருந்தார் என்று சொல்ல வேண்டும். அடிக்கடி அமைதியாக உட்கார்ந்து எங்களுக்கு "சகோதரர் டாங்" என்ற கவிதையைப் பாடிக் காட்டுவார். அந்தப் பாடலை நாங்கள் "கம்யூனிஸ்ட் உறுதியின் கவிதை" என்று கூறுவோம். சகோதரர் டாங்கின் புரட்சிகரமான வீர சாகஸங்களையும், ஜியாதின் சிறையில் அவர் தழுவிய வீர மரணத்தையும் எங்களுக்கு உணர்ச்சி பொங்கக் கூறுவார். டாங்கின் மனைவியை அவர் பெரிதும் புகழ்வார். அவர்களுடைய பல குழந்தைகளைக் காப்பாற்றியதோடு, கணவருடன் அவரது புரட்சி நடவடிக்கைகளுக்குத் துணை நின்றார். அதோடு தானும் சிறையில் கடைசி நிமிடம் வரை போராடியே புரட்சிக்காகவே இறந்தார்.

கணவனுடன் கசப்பையும், இனிப்பையும் பகிர்ந்துண்டு, மிக்க விசுவாசத்தோடு இறுதிவரை வாழ்ந்த மனைவியரின் வீரமிக்க கதைகளைக் கேட்பதையே மிகவும விரும்பினேன். இந்தக் கதைகளை எல்லாம் கேட்கும்போது என்னை எண்ணி நானே வெட்கப்பட்டுக் கொள்வேன். என் கணவருக்கு நான் உதவியாக இல்லாதிருந்து விட்டேன் என்பதற்காக மட்டுமல்ல, அவருக்குப் பல சமயங்களில் தடையாகவும், தொந்தரவாகவுமல்லவா இருந்திருக்கிறேன். பாவம் ட்ராய்! வீட்டிற்குத் தாமதமாக வரும்போதெல்லாம் என்னு

தொடரும்...

www.padippakam.com





# கேளுங்கள்..

**கேள்வி:** உங்கள் தலைவர் ஏன் பொது நிகழ்ச்சிகளிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொள்வதில்லை?

சுரேந்திரன்
கும்மிடிப்பூண்டி

**பதில்:** கலந்து கொண்டுள்ளார். 1971ம் ஆண்டு ''தமிழ் மாணவர் பேரவை'' முதல் தடவையாக பாரிய ஊர்வலம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடத்தியது. அதில் கலந்து கொண்டார். தமிழ் மாணவர்களுக்கு எதிராக சிறிமாவோ அரசினால் கொண்டு வரப்பட்ட தமிழர் கல்வியில் ''தரப்படுத்துதல்'' கொள்கைக்கு எதிராக நடத்தப்பட்டது இந்த ஊர்வலம். இந்த ஊர்வலத்தில் அன்றைய மாணவர் பேரவைத் தலைவர் பொன். சத்தியசீலன், அரிய ரெத்தினம், சிவகுமாரன் போன்றோரும் கலந்து கொண்டனர். என்பது குறிப்பிடத்தக்கது.

1977ல் இனக் கலவரத்தினால் குடி பெயர்ந்த மலையக மக்களை வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காந்தியத்தின் பெயரால் குடியமர்த்தப்பட்டது. இந்தச் சேவையில் முன்னணியில் இருந்தது இருவர். ஒன்று எங்கள் தலைவர் மற்றது மறைந்த சந்ததியார் (வசந்தன்) இந்தப் பணியில் இன்றைய எந்த ஒரு இயக்கமும் ஈடுபட்டது கிடையாது. மறைந்த TELO தலைவர் சிறிசபா ரெத்தினம் மட்டும் ஆறு மாத காலங்கள் எங்கள் தலைவருடன் நாவலர் பண்ணையில் பணியாற்றியுள்ளார். வன்னி மக்களுக்கும் மலையக மக்களுக்கும் ஏற்பட்ட பலதரப்பட்ட முரண்பாடுகளை பகிரங்க கூட்டங்கள் மூலமும், பொது நிகழ்ச்சிகள் மூலமும் அன்று தீர்த்து வைத்துள்ளார்.

பின்னர் 1978ம் ஆண்டு மட்டக்களப்பில் சூறாவளி அடித்து ஈடுசெய்ய முடியாத இழப்புகளை ஏற்படுத்தியது இயற்கை. இதனை நீங்கள் அறிவீர்கள். அன்று அறுநூறுக்கும் அதிகமான யாழ் இளைஞர்களை திருகோணமலைக்கு அழைத்து வந்து கடல் வழியாக மட்டு நகர் வந்து சேர்ந்தார். மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்திலும், பின்னர் செல்வநாயகம் ஞாபகார்த்த மண்டபத்திலும் முகாமிட்டு புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டார். அவர் அன்று ஆற்றிய பணி மிகப் பெரியது. யாழ்ப்பாணி - மட்டக்களப்பான் என்ற பாகுபாடு மறைய இந்தப் புனரமைப்புப் பணி பெரிதும் உதவிற்று. அங்கு பல பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து அதில் கலந்து கொண்டு உறையாற்றியுள்ளார்.

இன்று தலைவர்கள் என்று கூறுபவர்களும், அவர்களது பெருமைகளை ஊதிப் பிழைப்பு நடத்துபவர்களும் அன்று மட்டு நகர் மக்கள்பட்ட துயரங்களில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறுதல் என்றாலும் கூறி இருப்பார்களா என்று கேட்டுப் பாருங்கள்? விசிட் அடித்த தலைவர்களின் பட்டியல் எங்களிடமுண்டு.

அதன் பின் 1979ல் மட்டக்களப்பில் நடந்த தமிழ் இளைஞர் பேரவை ஊர்வலத்திற்கு தலைமை தாங்கியுள்ளார். இவ்வூர்வலம் மாமாங்கம் கோவிலில் இருந்து முகத்துவாரம் கடற்கரை வீதி வழியாக அரசடிச்சந்தி வரை நடைபெற்றது. இந்த ஊர்வலத்தின் முடிவில் தான் சிவப்புக் கறுப்பு வண்ணத்தில் ஓர் நட்சத்திரம் பதிக்கப்பட்ட புதிய கொடியொன்றினை தமிழ் இளைஞர் பேரவைக்கு என அறிமுகப்படுத்தப்பட்டது. அது வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் கொடி தான் இளைஞர் பேரவையின் கொடியாகவும் இருந்தது. தமிழ் இளைஞர் பேரவைக்கான கொடியினைத்தான் பின்னர் புளொட் இயக்கத்தின் கொடியாக மாற்றப்பட்டது.

இவையெல்லாம் நடைபெறும்போது துரோகிகளும், எதிரிகளும், தமிழ் மக்கள் மத்தியில் மிகக் குறைவாகவே இருந்தனர். ஆனால் 1983க்குப் பின்னர் போட்டி, பொறான்மை, சதி, துரோகம், பதவி வெறி, பெருமை, சண்டித்தனம் என பலத்தரப்பட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எங்கள் மக்களை வாட்டி எடுத்ததை நீங்கள் அறிவீர்கள். இன்றும் அது முடிந்தபாடில்லை. எனவே பாதுகாப்பு முக்கியமாகக் கருதப்படுகிறது.

அத்துடன் நாம் இருப்பது ஓர் அன்னிய நாட்டில் விடுதலைக்காக இன்னும் எவ்வளவோ தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது. பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விளம்பரம் தேடுவதை அவர் விரும்புவதில்லை. எங்கள் இயக்க நடவடிக்கைக்காகக் கூட அவரது புகைப்படத்தினை நாம் இது வரை வெளியிட்டதில்லை. போராட்டத்தில், மக்களின் நல் வாழ்வுக்கான செயல்த் திட்டத்தில் நம்பிக்கை வேண்டுமே அல்லாமல் விளம்பரத்திலோ, பெருமை பேசுகின்ற பொது நிகழ்ச்சிகளிலோ அல்ல எங்கள் விடிவு.

**கேள்வி:** பத்திரிகை ஆசிரியரே, E.P.D.P. வெளியிடும் தினமுரசு பத்திரிகை போல் சினிமா செய்திகளும், நடிகைகளின் படங்களையும் வெளியிட முடியாதா?

S. ஜெயநாதன்
கோயில் வீதி
கல்முனை. இலங்கை.

**பதில்:** எங்கள் நாட்டின் விடுதலைக்காகவே போராட்ட இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எந்த விடுதலையினை வென்றெடுக்க, அதற்கு உரமூட்ட நல்ல கருத்துக்களையும், எங்கள் எண்ணங்களையும் மக்களின் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ள உதவும் சாதனமே பத்திரிகை. தவிர சினிமாச் செய்திகளையும் நடிகைகளின் படங்களையும் போட்டு காம உணர்வினைத் தூண்டி அதன் மூலம் இளைஞர்கள் திரண்டு விடுதலைக்காகப் போராட்டத்தில் கலந்து வந்தால் என்னவாகும் விடுதலைப் போர்? விடுதலைப் போரினை மழுங்கடிக்கச் செய்யும் திட்டமே அப்பத்திரிகையின் தோற்றமாகும்.

ஓர் முதலாளித்துவ நாட்டில் இளைஞர்கள் · எழுச்சியினை திசை திருப்பவும், மழுங்கடிக்கவும் கவர்ச்சிப் படங்களையும், அதுசார்ந்த சஞ்சிகைகளையும் பெருமளவில் வெளியிட்டு அரசுக்கு எதிராக இளைஞர் சக்தி திரும்பாமல் இருக்க அரசுகளே திட்டமிட்டுச் செய்யும் சதி வேலையே இதுபோன்ற அச்சுக்கலைப் புரட்சியாகும். அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் இளைஞர் சக்தி இப்படிதான் மழுங்கடிக்கப்பட்டன.

இலங்கை அரசும் தமிழ் இளைஞர்களின் விடுதலை உணர்வினை மழுங்கடிக்கவே நீங்கள் குறிப்பிட்ட குழுவினரையும் அவர்கள் நடாத்தும் நடிகைகளின் பத்திரிகையையும் போற்றி வளர்த்து வருகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால் E.P.D.P தன்னை ஓர் மார்க்சிஸ்ட் கட்சி என்றும் தொழிலாளரின் பாதுகாவலன் என்றும் கூறிக் கொள்ளும் இந்தக் குழுவினர் எம் இனத்தின் கலாச்சார அழிப்பு எப்படி இருக்க வேண்டும் என்று சிங்கள மக்களுக்கு காண்பித்து அதனையிட்டு பெருமைபட்டுக் கொள்கின்றனர். சிங்கள இராணுவம் எங்கள் இனத்தை அழிக்க, E.P.D.P. எங்கள் கலாச்சாரம் பண்பாடுகளை அழிக்கிறது. எங்கள் பத்திரிகையில் இப்படங்களை எதிர்பார்ப்பது தவறு!

**கேள்வி:** அனைத்து ஈழ அமைப்புகளையும் ஒன்றுபடுத்தும் முயற்சியினை E.N.D.L.F. ஏன் எடுக்கக்கூடாது?

**பதில்:** இந்த நன்முயற்சிக்கு என்றுமே E.N.D.L.F பின் நின்றதில்லை. 1988-ல் E.P.R.L.F., TELO, PLOT ஆகிய அமைப்புகளுடன் இணைந்து 'தமிழ் தேசிய சபை' உருவாக்கி செயல்பட வைத்ததில் E.N.D.L.Fக்கு பெரும் பங்கு உண்டு.

1989ம் ஆண்டு தமிழ்த் தேசிய சபைக்குத் தெரியாமல் அம்பாறை மாவட்டத்தில் மாகாண அரசின் கீழ் இருந்த காவல் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த அப்போதைய முதல் அமைச்சர் வரதராஜப் பெருமாள் உத்தரவிட்டது தொடர்பாகவும், தமிழ் தேசிய சபைக்கு வந்த பணத்தின் கணக்கு விபரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்டதற்காகவும், தமிழ் தேசிய சபையை விட்டு E.P.R.L.F. வெளியேறியது. அன்றைய நிலையில் தமிழ் தேசிய சபையில் ஏற்பட்ட பிளவை அதிகப்படுத்துக்கூடாது என்பதற்காக E.N.D.L.F. மௌனம் சாதித்தது.

தமிழ் தேசிய சபையின் இராணுவ பிரிவின் தளபதியாக இருந்த ''காளித்' அவர்களை PLOT இயக்கம் பணத்திற்காகக் கொலை செய்தது.

அரசியல் லாபத்திற்காக வடக்குக் கிழக்கு மாகான சபையின் E.N.D.L.F. ன் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்த திரு. கணேச லிங்கம் அவர்களை படுகொலை செய்தது E.P.R.L.F. இயக்கம். அந்தப் பழியை புலிகள் மீது சுமத்தினர். அக்கொலையைச் செய்த E.P.R.L.F நபர் இன்றும், உயிருடன் இருக்கிறார். இயக்க மோதல்களை தவிர்ப்பதற்காக பதில் நடவடிக்கை எடுக்காமல் மிகவும் சகிப்புத்தன்மையுடன் E.N.D.L.F. கலந்து கொண்டது.

கடந்த காலங்களில் ஒற்றுமைக்காகவும், பின் ஏற்பட்ட ஒற்றுமையை குலையாமல் பாதுகாக்கவும் மிகவும் பொறுமையுடனும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் செயல்பட்டு வந்துள்ளது எங்கள் இயக்கம். இப்போதும் கூட ஒரு குடை அமைப்பின் கீழ் அனைத்து நன் சக்திகளையும் ஒன்று திரட்டும் நடவடிக்கையை E.N.D.L.F. மேற்கொண்டு வருகிறது. இதய சுத்தியோடு ஈழத்திற்காக உழைக்கும் அனைவரும் ஒரு குடையின் கீழ் அணி திரள வேண்டும் என்பதே E.N.D.L.F. ன் கோரிக்கையாகும். இந்த நன்முயற்சிக்கு தமிழ் கூறும் நல் உலகம் ஆதரவு தரும் என்று நம்புகிறோம்.

**கேள்வி:** கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகள் சந்திரிகாவுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளால் ஏதேனும் தீர்வு ஏற்படுமா?

**பதில்:** சுதந்திரம் பெற்ற நாள் முதல் எந்தச் சிங்களத் தலைவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அன்றைய எம் தலைவர்கள் நடாத்தாத பேச்சுவார்த்தையா? எத்தனை உறுதிமொழிகள் தந்தனர் சிங்களத் தலைவர்கள். ஆனால் குடியேற்றம் நிறுத்தப்பட்டதா? மொழியுரிமை வழங்கப்பட்டதா? கல்வி பறிக்கப்படாமல் தடுக்கப்பட்டதா? பௌத்த நாடு என்னும் பிரகடனம் நிறுத்தப்பட்டதா? சிங்களப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது அபிவிருத்தித் திட்டங்கள் தான் மேற்கொள்ளப்பட்டனவா? அனைத்தையும் விடுங்கள் இன அழிப்பையாவது நிறுத்தினார்களா?

பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் சிங்களவர்களுக்கு பொழுதுபோக்கு மட்டுமல்ல இன அழிப்புக்குக் கொடுக்கப்படும் இடைவேளையும் கூட. இன் றைய எம்மவருக்கு அதுவே பிணைப்பு. இவற்றில் எல்லாம் முடிவு கண்டுதானே நாம் தனி நாடு என்ற முடிவுக்கு வந்தோம்.

பேச்சுவார்த்தைகளினால் பலன் உண்டு. அது சம பலத்துடன் தமிழர் இருக்கும் வரைதான். இன்று பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுபவர்கள் என்ன பலம் கொண்டு நிற்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் ஏழு கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியினைரத் தவிர ஏனைய ஆறு கட்சிகளும் 1983லும் அதன் பின்னரும் வெளிவந்த கட்சிகள். பழுத்த சிங்

**விடுதலைக்காக மக்கள்மயப்படுத்தாத போராட்டம் பட்ட மரம் துளிர்க்க நீர் ஊற்றுவது போன்றதாகும்.**

படிப்பகம்

www.padippakam.com



கள தந்திரசாலிகளின் முன் இவர்கள் குழந்தைகளே. அதனால்தான் அவர்களுக்கு தங்குவதற்கு இடம், செலவுக்குப் பணம், விளையாட்டுக்குத் துப்பாக்கிகள் என்று கொடுத்துப் பராமரித்து வளர்த்து வருகின்றனர் சிங்கள ஆட்சியாளர்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியோ தனிநாட்டுக் கோரிக்கையினை மக்கள் முன் வைத்து வாக்குகள் பெற்று ஈழப் போராட்டத்திற்கு அடி கோலினர். ஈழ மக்கள் மனங்களில் நம்பிக்கை விதையினை விதைத்து அது இன்று உயிர்த் தியாகங்களால் விருட்சம் அடைந்த நிலையில் இந்தச் சில்லறைகள் எல்லாம் (E.P.D.P., PLOT, TELO, E.P.R.L.F) M.P. களாகின்றனர். அப்பதவிகள் எல்லாம் எமக்கான தல்லவா என்ற பதவி வெறியில் தமிழீழமும் மண்ணாங்கட்டியும் என்று அவர்கள் 'முன்பு கூறியது அத்தனையும் உதறித் தொலைத்து விட்டு எம்.பி வேட்டையில் இறங்கி ஏனைய துரோகிகளுடன் கூட்டுச் சேர்ந்து தரம் கெட்டு உருப்படாத பேச்சுவார்த்தை என்று தெரிந்தும் பதவியை எதிர் பார்த்து காலத்தை ஓட்டுகின்றனர்.

M.P. பதவியில் தங்கத்துரைக்கும் சம்பந்தனுக்கும் ஏற்பட்டிருக்கும் போரினைத் தீர்ப்பதே ஏனைய கூட்டணித் தலைவர்களுக்கு இன்று இருக்கும் முக்கிய கடமையாகக் கொண்டுள்ளனர்.

இப்படியிருக்கையில் என்ன தான் தீர்வினை இவர்களால் ஏற்படுத்த முடியும், என்ன தமிழீழமா வாங்கித் தரப் போகிறார்கள்? நிச்சயம் இவர்களால் தமிழ் மக்களுக்கு இழப்புகள்தான் ஏற்படும்.

## புலிகள் - பொதுமக்கள் மோதல்

● கடந்த 18-12-95 அன்று கொடிகாமத்தில் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட மோதலில், பள்ளி ஆசிரியர் ஒருவர் உட்பட 7 பொதுமக்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த மோதலில் புலிகளின் அனுமதி வழங்கும் செயலகத்தை பொதுமக்கள் தாக்கி பலத்த சேதத்துக்குள்ளாக்கினர்.

இதே போன்று திருகோணமலையிலும் புலிகளும் பொதுமக்களும் மோதிக் கொண்டனர். சேத விபரம் இன்னும் வெளிவரவில்லை. தமிழீழத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் மக்களை சர்வாதிகாரத்தனமாக அடக்கி ஆள நினைப்பது எரியும் நெருப்பை . பஞ்சைக் கொண்டு அணைக்க முயற்சிப்பது போலாகும். புலிகள் உணர்வார்களா?

## விரிவடையும் மோதல்

● தமிழ்ழ போராட்டத்துக்கு இந்தியாவின் ஆதரவு இன்றியமையாதது என்று கருதும் புலிகளின் ஒரு பிரிவினர். மீண்டும் இந்தியாவின் ஆதரவினைப் பெறும் அரும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். புலிகளால் திருகோணமலையில் இந்திய பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவி எரிக்கப்பட்டு இந்தியாவுக்கு எதிரான சுலோகங்கள் எழுப்பப்பட்டது. இதனால் அதிருப்தியடைந்த இந்திய ஆதரவான புலிகள் இதற்கு வருத்தம் தெரிவித்து அறிக்கை விடும்படி கோரினர். இதற்கு தலைமை மறுத்து விட்டதால் இலைமறைகாய் போல் இருந்த உட்பூசல் வெடிக்கு நிலையில் உள்ளது.

## அங்கும் இங்கும்

இலங்கையின் வட பகுதியில் இன்றைய மருத்துவ நிலை குறித்து 9.12.95 சனிக்கிழமையன்று லண்டனில் உள்ள கே (Gay) மருத்துவமனையில் மாநாடு ஒன்று நடைபெற்றது. . இம்மாநாட்டில் டாக்டர் அந்தோணி பி சிவுயி, விரிவுரையாளர் டி.பி.சவுத்தால், டாக்டர் ஜார்ஜ் கெலரி உட்பட கன்சர்வேடிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் செமிசன், பல, பொது நல அமைப்புகள் பல மருத்துவ ; சங்கங்களுடன் ENDLF பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் இம்மாநாட்டில் டாக்டர் சிவராஜினால் முன் வைக்கப்பட்ட விபரங்களின் சில பகுதி:- 1985-86ல் ஆறு (6) அறுவை சிகிச்சை மருத்துவர்களே வடபகுதியில் இருந்தனர். இவர்கள் கிட்டத்தட்ட 10,000 அறுவை சிகிச்சையை ஒரு வருடத்துக்கு செய்து வந்துள்ளனர். 1995ல் ஒரே ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர் உள்ளார். இந்த ஆண்டு இதுவரை 18,000 அறுவை சிகிச்சைகள் செய்துள்ளார். சிலருக்கு தற்போது இடம் மாற்றலுக்கான உத்தரவு இலங்கை அரசிடமிருந்து வந்துள்ளது. அதனை இவர் ஏற்க மறுத்துள்ளார்.

# ஆறாவது ஆண்டு நினைவு அஞ்சலி



## தளபதி: காளித் மறைவு : 10.1.1990

கட்டெறும்பில் தினம் கண்ட சுறுசுறுப்பை
நின் கடமையிலே நாம் காண்போம் 'காளித்' ஐயா!
ஈழத் திக் கெட்டும் நீயுலவித் திரியும் போது
தமிழர் நெஞ்சினிலே ஆறுதல் கொந்தளிக்கும்,
''தமிழர்கள் காவலன் காளித்'' என்று
எதிரிகள் சொல்ல எம் உள்ளம் மகிழும்,
இயமனின் காவலன் நம் இனமாய் வந்து
எடுத்தனனுயிரை இக்கட்டு நேரம் பார்த்து,
உலக மக்கள் எங்கெனினும் ஒடுக்கப்பட்டால்
உன் உயிர் கூட்டைப் பிரிந்தோடி அவரை மீட்கும்,
பாலஸ்தீன மக்களது விடுதலைக்காய்
பாங்குடனே போரிட்டுப் பலனும் தந்தாய்!
அன்னவர்கள் நெஞ்சினில் நீ ''அணையா ஜோதி''!
அவர் தந்த பெயரல்லோ ''காளித்'' நாமம்,
உயர்வான சிந்தனையில் நின் ஏழ்மை வாழ்வு
உருப்படிப் போராளிகளை உருவாக்கினதே!

கடலலை வான் முட்டக் குமுறி எழுந்து
கரை வந்தால் மாயமாய்ப் போவதைப் போல்,
திடங் கொண்ட நின் தன் போர் உபாயம் தன்னை
வீழ்த்தினர் கயவர் உம்மைச் சுட்டொழித்து,
நாட்டிலே நல்லோர் வாழக் கூடாதென்று
'புளொட்' என்ற எட்டப்பர் கூட்டத்தோடு
காட்டிலே நீ போன வழியை நோக்கி
கரைகின்றோம் ஐயா! எப்போ வருவாய்? என்று,.

நெஞ்சுரமாய் போரிடு தோழா என்று
நீ மட்டும் சுடுகாட்டிற் கேகினாயோ'
சுடுகாட்டின் பிணங்கள் உம் வரவைக் கண்டு
சுதந்திரம் பெற்று ஈழப் போரில் குதிப்பர்.
கப்பலிலே ஓட்டையது வந்த போது
கடல் நீரால் நிரம்பி அந்த கப்பல் தாழ
எத்துணையும் இல்லா அந்த ஜீவன் போல
ஏங்குகின்றோம் ஐயா! உன் பிரிவினாலே,
தமிழீழத்தின் முதன் முதல் தளபதியாய்
தோளை உயர்த்திய செந்தூரனே!
இதுவரை எவரும் பெற்றிடாத
சரித்திரம் பெற்ற சாதகனே!
பன் ரெண்டில் பாதி வருடங்கள்
பறந்தே போன இந்நாளில்
எம் நாடித்துடிப்பது ஓயும் வரை
எம் கண்ணீர் அஞ்சலி நிந்தனுக்கே.,

**சிங்களப் படையும் புலிகளும் இணைந்து நடாத்திய தாக்குதலை ''தளபதி காளித்'' தலைமையில் எதிர் கொண்டு உயிர்த் தியாகம் செய்த அனைத்து தோழர்களுக்கும் எமது வீர அஞ்சலி.**

# அஞ்சலி



எக்கட்சியையும் சாராமல் மனிதருள் மாணிக்கமாய், ஈழத் தமிழருக்காக தீக்குளித்து உயிர் நீத்த தியாகி பெரம்பலூர் அப்துல் ரவூப்

மறைவு: 16.12.95

தீப்பிழம்பான தியாகத் திரு ஒளியே!
ஈழவரின் நெஞ்சினில் அணையாத பேரொளியே!!
எக்கட்சியும் சாராத ஏந்தலே அப்துல் ரவூப்
தமிழீழ மக்களுக்காய் கோபுர தீப மானவனே,

இந்தியாவின் பெரம்பலூர் பெற்றெடுத்த புண்ணியமே!
உன் இல்லத்தார் போற்றும் ஈடில்லாப் பாக்கியமே!!
யார் சொல்வார் ஆறுதல் உம் வீட்டு உறவுக்கு
ENDLF உறுப்பினர்கள் இறைக்கின்றோம் ஆறுதலை.

ஈழ மக்கள் சார்பிலும், உலகத் தமிழர்கள் சார்பி லும்
அனுதாப அஞ்சலி உரித்தாகட்டும்.

ஈழ மண்ணை நேசித்து நீர் தீக்குளித்ததாலே
பிறந்த மண் ஒப்பாரி வைக்கிறது நீ விட்டுப் போனதாலே.



படிப்பகம்

www.padippakam.com



# ஈழத்தமிழரை இழிவுபடுத்தும் ஈனத்தமிழன் சச்சிதானந்தன்

ஈழத்திலிருந்து இனப் படுகொலை அதிகமானபோது உலகின் பல்வேறு நாடுகளுக்கும் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தனர். இன்று ஈழ அகதிகள் இல்லாத நாடு உலகிலேயே இல்லை - என்ற நிலைமை. போன இடங்களில் எல்லாம் எமது மக்கள் படும் துயரங்களும், அவலங்களும், அவமானங்களும் சொல்லுக்கு அடங்காதவை. இப்படியான அவமானங்களில் வெந்து, நொந்து போயிருக்கும் ஈழத் தமிழ் மக்களை வேல் கொண்டு குத்தி அவர்கள் படும் வேதனையை ரசித்துள்ளார் கதிர் காமு க.சச்சிதானந்தன்.

23,12,'95 அன்று தினமணியில் வெளிவந்த ''தமிழகத்தில் ஈழத் தமிழரின் கடமைகள்'' என்ற கட்டுரையினை கீழே அப்படியே தந்துள்ளோம். இக்கட்டுரையைப் படித்து வேதனையும், கோபமும் அடையாத ஈழத் தமிழர்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

ஈழத் தமிழர்களை மிக மோசமாக வெறுப்பவர்கள் கூட இதுபோன்ற அருவருக்கத்தக்க, பொய் நிறைந்த, உண்மைகளை மறைத்த கட்டுரை யொன்றினை எழுதியிருக்க முடியாது. தயவு செய்து இந்நபரது கட்டுரையினைப் படித்து பாருங்கள்.

தின மணி செய்தி
(பெட்டி செய்தி)

சனிக்கிழமை, டிசம்பர் 23, 1995 தினமணி சென்னை 5

## தமிழகத்தில் ஈழத் தமிழரின் கடமைகள்



க. சச்சிதானந்தன்

பாண்டி பஜார் துப்பாக்கிச் சூடு, மீனம்பாக்கம் விமான நிலையக் குண்டு வெடிப்பு,ஆகிய பாரிய குற்றங்களில் சைதானவருக்கு நீதிமன்றத்தில் பிணை நின்றோர் யாவரும் தமிழகத்தின் உயர்நிலைப் பண்பாளர். சங்கிலிப் பறிப்பு, விதி மீறல், ஆட்கடத்தல் ஆகிய சிறு குற்றங்களில் ஈடுபட்ட ஈழ அகதிகளைத் தமிழக காவல்துறை மன்னித்து விடுவித்தது. சமுதாயம் கை கொடுத்தது; சட்டம் வளைந்து கொடுத்தது; அரசியலார் ஆதரித்தனர். சிங்களவரால் அல்லலுற்று ஆற்றாது இங்கு அகதிகளாய் வந்த ஈழத் தமிழருக்கு அன்பு காட்டுவோம், ஆதரிப்போம்: அவர்கள் உடன் பிறப்புகள். இரத்தத்தின் இரத்தங்கள் என்றது தமிழகம்.

சுங்க வரி, அன்னியச் செலாவணி விதி, குடிவரவுச் சட்டம் யாவும் தளர்த்தப்பட்டு 'படகு அகதிகள்' மாலையுடன் வரவேற்கப் பெற்றனர்.

வசதியற்றவர்களுக்கு தமிழகமெங்கும் முகாம்கள். ஏனையோருக்கு வாடகைக் குடியிருப்புகள் மற்றும அரசியலாருக்கு விருந்தினர் மாளிகைகள் அமைந்தன. பள்ளி, கல்லூரி மற்றும் கல்வி நிலையங்களில் வழமைக்கு அதிகமான எண்ணிக்கையில் ஈழ அகதி மாணவர்கள் அனுமதிக்க வசதி.

தொழில் கல்விக்கு கட்டாய மேலதிக இட ஒதுக்கீடு. இதனால் ஆண்டுதோறும் 700-க்கு மேற்பட்ட ஈழ அகதி மாணவர் தொழில் வல்லுநர் ஆயினர். மருத்துவரும், மருத்துவ மனைகளும், கட்டணம் ஏதுமின்றி ஈழ அகதிகளுக்கு உதவினர்.

வணிகர் தாராளமாக வாரி வழங்கினர்.

செய்தி இதழ், வானொலி, தொலைக்காட்சி, ஈழ அகதி பற்றி அனுதாபத்துடன் செய்தி வெளியிட்டன.

நடுவண் அரசும், மாநில அரசும் ஈழ அகதிகள் தொடர்பாக வெளியிட்ட அரசு ஆணைகள் நூற்றுக்கணக்காயின.

1981 தொடக்கம் இலைமறைகாயாக ஈழ அகதிகள் பெற்ற இவ் வசதிகள் 1983-க்குப் பின் அரசின் கொள்கையாகவும், சமுதாயத்தின் தெளிந்த சிந்தனையாகவும் சட்டத்தின் துணை பெற்றுத் தமிழக மக்களின் அன்பு மழையுடன் வழங்கப்பெற்றன. 1987 வரை தொய்வின்றி இப்பாச உணர்வு நீடித்தது. 1987-ல் ஈழ அகதிகள் நாடு திரும்பக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாகக் கூறி, திரும்புவதற்கு எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன. எனினும் நாடு திரும்புமாறு எவர்மீதும் வற்புறுத்தல் இருக்கவில்லை.

1987-1991 காலப் பகுதியில் ஈழ அகதிகளின் சிறு குற்றங்கள் கண்டிக்கப்பெற்றன. பெருங் குற்றங்கள் விமர்சனத்துக்கு உள்ளாயின. சட்ட வரம்புக்குள் வாழுமாறு அன்போடு ஈழ அகதிகளிடம் எடுத்துச் சொல்லப் பெற்றது.

அன்னியச் செலாவணி விதிகள் ஈழ அகதிகளுக்கு கடுமையாக்கப்பெற்றன. தொழில் தொடங்க முடியவில்லை; வீடு வாங்க முடியவில்லை; பணியில் சேர முடியவில்லை. ஈழத்தில் காயமடைந்த போராளிகளுக்கு மட்டும் வரவேற்பு, ஏனையவர்களுக்கு புறக்கணிப்பு. இந்திய விசா கிடைப்பதில் கெடுபிடி. கரையோரங்களில் கண்காணிப்பு, காவல் நிலையத்தில் ஈழ அகதிகள் பதிய வேண்டும். சிறையையொத்த சிறப்பு முகாம்கள் போராளிகளுக்கென அமைக்கப் பெற்றன.

1991 ஆனிக்குப் பின் கல்வி அனுமதிக்கு மறைமுக மறுப்பு, தொழில் கல்வி ஒதுக்கீடு நீக்கம். சிறைபோன்ற சிறப்பு முகாம்களின் எண்ணிக்கை அதிகரிப்பு. போராளிகள் மீது வெறுப்பு என வந்தன.

ஈழத் தமிழர்கள் நடைமுறை வாழ்வில் கடும் பாதிப்பு. கல்விக்கு வசதி குறைவு. தொண்டு நிறுவனங்கள் முகாம்களுக்கு போக முடியவில்லை. ஈழத் தமிழர்கள் மீது கடுமையான கண்காணிப்பு. ஈழ அகதிகள் மட்டுமல்ல, ஈழத் தமிழர் எங்கிருந்தாலும் எவரும் குற்றம் செய்யக் கூடியவரே என்ற கணிப்பு அவர்கள் நெற்றியில் எழுதாமல் எழுதி ஒட்டாமல் ஒட்டப்பெற்றது.

'1991-க்குப் பின்னரும் "போதும் போதும் உங்கள் நாட்டுக்குத் திரும்பிப்போங்கள்' என்ற உள்ளக்கிடக்கையைக் கூட தமிழக மக்கள் வாய் திறந்து வெளிச் சொல்லவில்லை. 1989-1995 வரை உள்ள 15 ஆண்டுக் காலப் பகுதியில் முதலில் (1981-87) மாலையிட்ட வரவேற்பு. பின்பு (1987-91) மாசற்ற கேண்மை. பின்பு (1991-95) போதும் போதும் என்ற வெறுப்பு என 3 படி நிலைகள்.

இப்படி ஏன் ஆயிற்று? ஈழ அகதிகள் பெற்ற வரவேற்பையும் பாதுகாப்பையும் அவர்களுட் சிலர் தவறாகப் பயன்படுத்தியதே அடிப்படைக் காரணம் ஆகும்.

ஈழ அகதிகளுள், சாதாரண மக்கள், போராளிகள், சமூக விரோதிகள் என மூவகையினர் இருந்தனர்.

இவர்களுள் சாதாரண மக்களுக்கு, தமிழகத்தில் ஏற்பட்ட நேரடித் துன்பங்கள் குறைவு. போராளிகள் வளர்ச்சிக்கு ஆயுதம் வழங்கி உற்சாகப்படுத்திய அரசுகள், அதன் விளைவுகள் தமிழக மண்ணிலேயே நிகழ்ந்த போது வருத்தமடைந்தன. போராளிகள் மீது நடவடிக்கைகள் எடுத்தன.

தொடக்கத்தில் சமூக விரோதிகள் மன்னிக்கப் பெற்றனர். பின் கண்டிக்கப் பெற்றனர். பின்னர் சட்டம் மூலம் தண்டிக்கப்பட்டனர்.

இவர்களின் சிறு குற்றங்கள்கூடப் பலூனாக ஊதப் பெற்றன. 1991-க்குப் பின்னர் இவை பலூன் விளம்பரங்களாகக் கொடியேறின. ஈழத் தமிழர் அனைவரும் குற்றவாளிகளாயினர். எனினும் உண்மையும் நீதியும் உறங்கவில்லை. சாதாரண அகதிகள். போராளிகள், சமூக விரோதிகள்- மூவரையும் பிரித்து வேறாக்கி நியாயங்களைக் கூறத் தமிழகத்துச் சிந்தனையாளர் பலர் முன் வந்தனர். தெளிவான கருத்துரைகள் மூலம் தமிழகத்தின் மனசாட்சியாக விளங்கினர்.

போராளிகளுக்கு அனைத்து நிலையிலும் ஆதரவு கொடுத்தவர் பலருள், பெருஞ்சித்திரனார், பழ.நெடுமாறன், சுப.வீ, தியாகு, மணியரசன் ஆகியோரின் பெயர்களைச் செய்தித்தாள்கள் அடிக்கடி வெளியிட்டன.

ஈழ அகதிகளிடையே உள்ள சமூக விரோதிகளின் குற்றச் செயல்களை ஊதக் கூடிய அளவு ஊதி ஈழத் தமிழர் அனைவரையும் அருவருக்கத்தக்கவர்கள் என வண்ணம் தீட்டிய செய்தியாளர்களும் அரசியலாரும் 1991-க்குப் பின் முதன்மை பெற்றது துரதிருஷ்டவசமானதே.

1995 வைகாசிக்குப் பின் காற்றுத் திசை மாறியது. ஈழத்தில் சிங்களக் கொடுங்கோன்மை பெருமளவில் கட்டவிழ்த்து விடப்பட, தமிழக மக்களின் பாசமும், பரிவும் மீண்டும் வெளிப்பட்டன. படிப்படியாக இந்த உணர்வு தமிழமெங்கும் பரவியது.

தமிழக மக்களின் இயல்பூக்க ஆதரவுக்கும் அனுதாபத்திற்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து கொடுத்த வடிவமைப்பே 30-11-95-ல் நடந்த முழு அடைப்பாகும். ஈழ அகதிகளிடையே சாதாரண மக்கள், போராளிகள், சமூக விரோதிகள் மூவரையும் தனித்தனியே பிரித்துப் பார்த்து ஈழத்தில் துன்பப்படும் சாதாரண மக்களுக்கே தமது ஆதரவும் அனுதாபமும் என தமிழகம் ஒரே குரலில் கூறியுள்ளது.

தமிழகம் ஈழத் தமிழரின் போராட்டக் களமல்ல. தமிழகத்தில் ஈழத் தமிழருக்கு எதிரான வன்முறைத் தூண்டுதல்கள் ஒரு பொழுதும் திட்டமிடப்படவில்லை. இதை ஈழத் தமிழர்கள் நன்றாக உணர்ந்து கொண்டுள்ளனர். தமிழகத்தில் உள்ள வசதிகள் வாய்ப்புகள் ஈழத் தமிழருக்கு குறைந்ததற்குக் காரணம் ஈழத் தமிழரே அன்றி, தமிழகத்தார் அல்ல.

பட்டுப்போய்விட்டதோ என அஞ்சிய பாச உணர்வு மீண்டும் தலைதூக்கி உள்ளது. ஈழத் தமிழர் பால் நல்லுணர்வும், பாசமும், பெருகி உள்ளது. இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது தமிழகத்தில் வாழுகின்ற ஈழத் தமிழரின் தலையாய கடமையாகும்.

வாய்ப்பு மீறல்களைத் தவிர்த்து வன்முறைகளை நிகழ்த்தாமலும், சட்டத்துக்குட்பட்டுக் குறைகளை எடுத்துக் கூறியும் தமிழகம் பொழியும் அன்பு மழைக்கு நன்றியாகவும் பெறுமதியானவர்களாகவும் வாழ்ந்து காட்டுவது ஈழத் தமிழர் ஒவ்வொருவரது தலையாய கடனாகும்.

**தமிழகம், 1981 முதல் 87 வரை**

**ஈழத் தமிழர்களை மாலையிட்டு வரவேற்றது.**

**1987 முதல் 91 வரை மாசற்ற கேண்மை.**

**1991-க்குப் பிறகுதான் வெறுப்புணர்வு தலைதூக்கியது.**

**இதற்குக் காரணம் ஈழத் தமிழரே; தமிழகம் அல்ல!**

கட்டுரை ஆரம்பத்தில் பாரிய குற்றங்களான பாண்டிபஜார் துப்பாக்கிச் சூட்டிற்கும், விமான நிலைய குண்டு வெடிப்பிற்கும் பிணை நின்றோர் உயர்நிலைப் பண்பாளர் என்றும், சிறிய குற்றங்களான சங்கிலி பறிப்பு, ஆட் கடத்தல் போன்றவற்றால் தமிழக மக்களது ஆதரவு போய்விட்டது என்கிறார் சச்சி. அப்படியாயின் பாரிய குற்றங்களான பத்மநாபா கொலை, ராஜிவ் காந்தி கொலை, இராமநாதபுரத்தில் போலிசார் கொலை, சுங்க அதுவலர் கடத்தல் போன்று பாரிய குற்றங்கள் புரிந்திருந்தால் உயர்நிலைப் பண்பாளர்கள் பிணை கொடுத்திருப்பார்கள். சங்கிலி பறித்ததாலும், ஆட்கடத்தலாலுந்தான் எல்லாம் கெட்டது என்கிறார்.

ஈழத் தமிழரை மூன்றாக பிரித்துள்ளார் எங்கள் கதிர்காமு சச்சி (i) சாதாரன மக்கள் (ii) போராளிகள் (iii) சமூக விரோதிகள் என்று மூன்று வகையினர் இருப்பதாக இவர் கண்டுபிடித்துள்ளார். தன்னுடைய கண்டுபிடிப்பைத் தமிழக மக்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இதுவரை ஈழத்தமிழர் என்று பார்த்து வந்த தமிழக மக்கள் இனிமேல் இவர்களில் சமூக விரோதிகள் யார் என்று துருவிப் பார்க்கச் செய்துள்ளார் சச்சி. முன்னர் இந்த மூன்று பிரிவினரையும் பிரித்து வேறாக்கி நியாயங்கள் கூறினர் சிந்தனையாளர்கள் என்றதுடன் போராளிகளுக்கு ஆதரவு கொடுத்தனர் என்று சிலரது பெயரையும் குறிப்பிட்டு உள்ளார். அப்படிக் குறிப்பிட்ட இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் முன்னணி ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழர்களை மூன்றாக பிரித்ததும் அல்லாமல் ஆண்டுகளையும் மூன்றாகப் பிரித்துள்ளார். (I) 1981 — 1987 (II) 1987 — 1991 (III) 1991 — 1995 என்பதாகும். 81-ல் வரவேற்பு, 87-ல் கேண்மை (நட்பு), 91-ல் போதும் போதும் என்ற வெறுப்பு.

இந்த 1991-ல் போதும் போதும் என்ற வெறுப்பு ஏன் வந்தது? சமூக விரோதிகள் சங்கிலி பறித்ததாலா? ஐயோ பாவம்! சச்சிக்குத் தெரியாத விடயம்தான் 1991 மே 21ம் திகதி நடந்தது. அதனால்தான் ஈழத் தமிழரைத் திருடாது இருக்கும்படி அறிவுரை கூறியுள்ளார். இல்லை, 1991 மே மாதத்தினை ஞாபகப்படுத்தினால் தமிழகத்திலிருக்கும் புலிகள் ஆதரவாளர்கள் கோபித்துக் கொள்ளுவார்கள். இதனால் சச்சியின் வியாபாரம் கெட்டுவிடும். ஆகவே, அப்படியான பயங்கரச் செய்தியினை புதைகுழிக்கு அனுப்பி விட்டார் கதிர்காமு சச்சி. உண்மைகள் புதை குழிக்குள் சென்றாலும் மீண்டும் கிளம்பி வரும்!

சுங்கவரி, அன்னியச் செலாவணி, குடி வரவு போன்ற சட்டங்கள் தளர்த்தப்பட்டு ''படகு அகதிகள்'' வரவேற்கப்பட்டனர் என்று கூறியுள்ளார். படகு அகதிகள் என்று கூறுவதன் மூலம் தான் (சச்சி) விமானத்தில் வந்தவர் என்பது படிப்பவர்களுக்குப் புரியும்படி செய்துள்ளார். ஏனெனில் படகில் வருபவர்கள் வசதியற்ற மோசமானவர்கள் என்று அவர் விளக்கம் கொடுக்க முற்பட்டுள்ளார். உண்மைதான்! இவர் அகதியாய் வந்தவர் அல்ல. விமானத்தில் வந்த ஒரு வியாபாரிதான். நல்ல வேளை படகு அகதிகள் - விமான அகதிகள்

தன் இனத்தையும் பிறந்த மண்ணையும் நேசிக்காதவன் சுயநலவாதி.

www.padippakam.com



என்று நான்கு பாகங்களாக ஈழத் தமிழரைப் பிரிக்காமல் விட்டார் கதிர் காமு சச்சி.

சுங்க வரியைப் படகு அகதிகள் ஏமாற்றவில்லை. அதனை ஏமாற்றியது இந்த வியாபாரி சச்சிதானந்தன் போன்ற வியாபாரிகள்தான். இலங்கையில் 350 ரூபாய் விலையில் உள்ள புத்தகம் ஒன்றினை (யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு) இந்தியாவில் 885 ரூபாய்க்கு விற்கும் இவர் சுங்க அதிகாரிகளுக்கு தண்ணி காட்டியவர் தான். என்ன கொள்ளை லாபம்; கள்ளச் சாராயம் விற்பவர்கள் போன்று மேசைக்கு கீழே வைத்தல்லவா விற்கிறார். இலங்கை 350 எங்கே இந்தியா 885 எங்கே? இதனை லாபத்துக்காக விற்கவில்லை. தமிழ் மக்களுக்கு ஓர் சேவையாகவே செய்கிறேன் என்று வாங்குபவர்களுக்கு இன உணர்வினைத் தூண்டிவிடுவார் சச்சி. தமிழ் உணர்வினை மட்டும்தான் தூண்டுகிறார் என்று நினைக்கிறீர்களா? சிங்கள உணர்வினையுமல்லவா தூண்டுகிறார். சிங்கள அரசு தமிழ் மக்கள் மேல் சிங்களத்தைத் திணிக்க முயன்று தோல்வி கண்டது. ஆனால் சச்சியோ தமிழகத்தில் இருந்து கொண்டே தமிழ் மூலம் சிங்களம் கற்கும் புத்தகங்களைக் கொழுத்த விலைக்கு விற்கிறார். ஒன்று இரண்டல்ல பல முகங்கள் அவருக்கு.

இந்த ஐந்து வருடமும் வியாபாரம் படுத்ததுதான் இவருக்கு வந்த கோபம். இதற்கு காரணம் புலிகள்தான் என்று சொல்ல வந்தால் களை கட்டி வரும் வியாபாரம் முற்றாகப்படுத்துவிடும். இப்போதுதான் தன்னை ஓர் ஈழத்தின் தூண் என்று வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் பாரீஸ் ஈழநாடு, லண்டன் ஈழநாடு, ஈழ முரசு போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகள் கதைகள் எழுதி தனது படத்தினையும் பிரசுரித்து வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் இவரை ஓர் தியாகச் செம்மல் என்று எண்ணுமளவுக்கு சூழ்நிலையை உருவாக்கி வரும் வேளையில் புலிகள் பற்றிப் பேசி தலையை தொலைப்பது விவேக மற்ற செயல் என்று கண்டு 30,000 ஈழத் தமிழர்களுக்கு ''சமூக விரோதிகள்'' என்ற பட்டம் சூட்டி தனது வியாபாரத்தை தொடர்கிறார்.

சிங்கப்பூர், மலேசியா என்று புத்தக வியாபாரத்தில் இவரால் ஏமாற்றப்படாத புத்தகக் கடைக்காரர்களே இருக்க முடியாது. இலங்கை தவிர மற்ற இடங்களில் தன்னை ஓர் புலிகளின் ஆதரவாளன் என்று காண்பித்துத்தான் தனது வியாபாரத்தினை இன்று மேற்கொள்ளுகிறார். புலிகளின் பகுதிக்குப் போக முடியாத புலிகள் ஆதரவாளன் இவர்.

தமிழக மக்கள் மட்டுமல்ல, உலகமே ஈழத் தமிழர்கள் மீது வெறுப்புக் கொள்ள காரணமாக அமைந்ததும், போதும் போதும் என்றானதும் அமரர் ராஜிவ் காந்தி படுகொலையே அல்லாமல் வேறு எந்தக் காரணமும் இல்லை. குறிப்பாக புலிகளது படுகொலை வெறிதான் தமிழக மக்களையும், உலகத்தையும் வெறுப்புற வைத்தது என்பதனை கதிர்காமு சச்சி மறைத்து வியாபார நோக்கில் தனது ஆராய்ச்சியை வெளியிட்டுள்ளார்.

## ஈழத்தமிழர்கள் கயவர்கள் அல்ல

ஈழத் தமிழ் மக்கள் பஞ்சத்தில் அடிபட்டு, உணவுக்கும், உடைக்கும், இருப்பிடத்திற்கும் வழியின்றி இந்திய மண்ணுக்கு வரவில்லை. அல்லது அவர்கள் ஓர் மோசமான வாழ்க்கை நிலையை உடையர்களும் அல்ல. சொந்தமான தொழில் உள்ளவர்கள். விவசாயம், மீன் பிடி, தோட்டச் செய்கை, உதிரித் தொழில்களில் தம்மை இணைத்திருந்தவர்கள். வயல், மீன் பிடிக்குரிய தளபாடங்களை தாமே வைத்து கௌரவமாக வறுமையை அறியாமல் சீவியம் நடத்தியவர்கள். அவர்களின் வீட்டு அமைப்பு அவர்களது தனித் தன்மையைக் காட்டும். வீட்டைச் சுற்றி வேலி பரந்த முற்றம், சொந்தக் கிணறு, மாட்டுப்பட்டி என்ற அமைப்பு. சேரியோ, வன்முறைத் தனங்களோ இல்லாத சூழ்நிலை. சமய, பக்தி, பெரியோருக்கும் சிறியோருக்கும் மரியாதை தரல் என்பன இந்த மக்களின் பழக்கம். குழந்தைகளைக் கூட நீங்கள் என்று மரியாதை கொடுத்து அழைக்கும் பண்புடையவர்கள் எங்கள் மக்கள்.

இந்தியாவுக்கு இடம் பெயர்ந்த இவர்கள் மிக மோசமான சூழ்நிலையை எதிர் கொண்டனர். முகாம்களில் அதிர்ச்சி தரும் நிலையில் வாழ்வைத் தொடங்கினர். விவசாயமோ, மீன் பிடியோ, உதிரித் தொழிலோ இங்கே இவர்களுக்கு இல்லை. சொந்தச் சகோதரர்களுக்கு உதவ முடியாத நிலையில் தமிழக மக்களின் பொருளாதார நிலை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கலப்படமற்ற கலை, கலாச்சாரம், பண்பாடுகளுடன் வாழ்ந்தவர்கள் எங்கள் மக்கள். சிங்களப் பேரினவாத அரசின் இன அழிப்புக் கொடுமையினால்தான் இந்தியாவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் அகதிகளாகப் புறப்பட்டனர் ஈழத்தவர். அனைத்தையும் உதறிவிட்டு வெறும் கையுடன் இரண்டரை லட்சத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தில் அகதிகளாய் வந்திறங்கினர். இவர்களில் 17 முதல் 23 வயது வரை உள்ள இளைஞர்கள் ஏறத்தாள 25,000 பேர்வரை இருக்கும். இந்த இளைஞர்கள்தங்கள் தாய் தந்தையரின் அரவணைப்பில் வாழ்ந்தவர்கள். நாட்டின் மோசமான நிலையில் பெற்றோரை விட்டு அண்டை நாட்டில் அகதிகளாயினர். பெற்றோரே தங்கள் பிள்ளைகள் உயிர் தப்பினால் போதும் என்று அவர்களாகவே அனுப்பியும் வைத்தனர்.

## ஈழ இளைஞர்கள் சீரழிவுக்குக் காரணம்

பல ஆயிரக்கணக்கானோர் பல இயக்கங்களிலும் இணைந்தனர். இயக்கங்கள் உருக்குலையாமல் இருக்கும்வரை போராட்ட உணர்வில், தலைமையின் வழி காட்டுதலில் கட்டுக் கோப்பாகத்தான் இருந்தனர்.

சிறி சபாரத்தினத்தை புலிகள் இயக்கம் என்று கொலை செய்ததோ அன்று அவ்வியக்கம் சீர்குலைய ஆரம்பித்தது. அந்த இயக்கத்தின் போராளிகள் தலைவர் இன்றித் தவித்தனர். இனி எதற்குப் போராட்டம் தமிழனே தமிழனைக் கொல்கிறான் என்று விரக்தியுற்றனர். இவ்விதமே புலிகள் பல இயக்கத் தலைவர்களையும், போராளிகளையும், ஆதரவாளர்களையும் கொன்று தீர்த்ததை உலகறியும். இதன் விளைவுதான் இளைஞர்களின் சீரழிவுக்குக் காரணமாக அமைந்தது.



தமிழகத்தில் சங்கிலி பறிப்புகள் நடந்துள்ளன. திருட்டுகள் நடந்துள்ளன. இளம் வயதில் பெற்றோர் இன்றி, தலைவர் இன்றி, இருக்க இடமின்றி தவித்த அவர்களில் ஒரு சிலர் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருக்கலாம்.

வியாபாரிகளில் இந்த சச்சிதானந்தன் போன்று திருட்டு வியாபாரிகளும் இருக்கத்தானே செய்கின்றனர். இதுபோன்றுதான் 25,000 பேரில் 50 பேராவது தவறு செய்ய ஆளாக்கப்பட்டனர். இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள்தான்.

ஆனால், கதிர்காமு என்ன சொல்ல வருகிறார் என்றால், ஈழத் தமிழரில் மூன்றில் ஒரு பிரிவினர் சமூக விரோதிகள் என்று. தமிழகத்தில் ஏறக்குறைய தொண்ணூர்பிரம் பேர் இருக்கின்றனர். இவர்களில் முப்பதினாயிரம் பேரை சமூக விரோதிகள் என்று கண்டுள்ளார். இது மட்டுமல்ல. தமிழகத்தில் இருக்கின்ற ஈழ அகதிகளிடையே சாதாரண மக்கள், போராளிகள், சமூக விரோதிகள் மூவரையும் தனித்தனியே பிரித்துப் பார்த்து ஈழத்தில் துன்பப்படும் சாதாரண மக்களுக்குத் தான் தமது ஆதரவும், அனுதாபமும் என தமிழகம் ஒரே குரலில் கூறியுள்ளது என்று வேறு அடித்துக் கூறியுள்ளார்.

## யார் சமூகவிரோதி

கதிர் காமு கண்டுபிடித்த இந்த மூன்று பிரிவில் எந்தப் பிரிவில் இந்த வாத்தியார் இருப்பார் என்று நினைக்கத் தோன்றும். அடித்துக் கூறலாம், சமூக விரோதிகள் பிரிவில் இவர் இருக்கிறார் என்று. ஏனெனில் இவர் சென்னை வந்த வேளைPLOT தலைவர் உமா மகேஸ்வரனைச் சந்தித்து நாங்கள் ஓர் அச்சகம் ஆரம்பிக்கலாம். புதிய பாதை, மக்கள் பாதை, பத்திரிகைக்கான அச்சகம் அனைவருக்கும் தெரிந்ததே. அதனால் யாருக்கும் தெரியாமல் இதை ஆரம்பிப்போம். Re - Cast (தேய்ந்த அச்சு எழுத்துக்களைப் புதுப்பிப்பது) செய்யும் மெசினையும் வாங்கலாம். இயக்கப் பிரச்சாரத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று கூற இரகசியமாக இயக்கப் பணத்தை முதலீடு செய்வதில் சிறந்தவரான உமா மகேஸ்வரன் சச்சியை நம்பி இலட்சக்கணக்கில் இயக்கப் பணத்தை வாரி வழங்கினார்.

மௌண்ட் றோட்டில் இடம் எடுத்து ஆரம்பித்தார். ''காந்தளகம்'' என்ற அச்சு நிறுவனத்தை. இவர் இலங்கையிலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்ததால், பேப்பர் திருடுவது, அச்சுத் திருடுவது, எழுத்தாளர்களை ஏமாற்றுவது என்று பல தரப்பட்டதை அறிந்திருந்தார். உமா மகேஸ்வரனுக்கு அவ்வப்போது இதன் வளர்ச்சி பற்றி அறிவித்துக் கொண்டிருந்தார்.

உமா மகேஸ்வரன் கொழும்பில் இறந்ததும் புளொட் அங்கத்தினர் பணத்தைக் கொடுக்கும்படி கேட்டனர். எழுத்துக் கணக்கில் எதுவும் இல்லாததால் பணத்தைக் கேட்டவர்கள் பற்றி பொலிஸில் முறையிட்டு உள்ளே தள்ளிவிடுவேன் என்று மிரட்டி அனுப்பி விட்டார் நம் கதிர் காமு சச்சி.

இதுதான் இவரது முதல் மோசடி என்று எண்ண வேண்டாம். இப்பெருமான் தந்தை செல்வாவுக்கு தூபி கட்டுகிறேன் என்று கூறி மக்களிடம் சேர்த்த பணத்தை மோசடி செய்தவர். யாழ்ப்பாணத்தில் வீர சிங்கம் என்பவரது பெயரில் உள்ள மண்டபம் ஒன்றினைத் தவிர வேறு எந்த ஒரு மண்டபமும் கிடையாது.

பண்டாரநாயக்காவுக்கு கொழும்பில் பாரிய ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை சீன உதவியுடன் சிங்களவர் கட்டி வைத்துள்ளனர். அதே போன்றதோர் மண்டபத்தினை தந்தை செல்வா அவர்களின் பெயரில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வந்த நேரத்தில் ''அறங்காவல் குழு'' என்ற பெயரில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண வர்த்தகர்களிடம் இரகசியமாகப் பணம் சேர்க்கத் தொடங்கி விட்டார் சச்சி. இந்தக் குழுவுக்கு திரு. நேசையா என்பவர் தலைவராக இருந்தார். அவர் வயோதிபர் என்பதனால் முழுப் பொறுப்பையும் இவரிடமே கொடுத்துவிட்டார். நாங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று கூளைக் கும்பிடு போட ஆரம்பித்தவர் இன்றும் யாரைப் பார்த்தாலும் அதனைத் தொடர்கிறார் சச்சி. கூட்டணியில் சீட் கிடைக்கவில்லை என்று விரக்தியிலிருந்த தந்தை செல்வாவின் மகன் என்ற தகுதியை மட்டும் பெற்றிருந்த சந்திரகாசனை இதற்குத் தலையாட்ட வைத்து மோசடியை மேற் கொண்டார்.

காகம் கூட களைப்பாற முடியாத ஓர் தூபியினை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் முன்பு இவர்கள் சேர்த்த பணத்தில் திருடியது போக மீகுதியில் கட்டி முடித்தனர். எங்கே கட்டினார்கள் தெரியுமா? யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் முன்பாக. யாழ் மக்கள் அந்த போலிஸ் நிலையப்பக்கமே தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டார்கள். அவ்வளவு கொடூரமானது அந்தச் சிங்களப் பொலிஸ் நிலையம். அங்கு கொண்டு போய்க் கட்டினர் தூபியை. கட்டியவர்களைத் தவிர அப்படி ஓர் தூபி இருப்பதாகவே ஈழத் தமிழருக்குத் தெரியாது.

துரை ராஜா என்பவர் அதன் கட்டுமான குத்தகையை எடுத்திருந்தார். தன்னிடம் கொடுத்த பணம் ஒன்று. இவர்கள் கணக்கு காட்டிய பணம் வேறொன்று எனக்கூறி, தந்தை செல்வாவின் பெயரிலும், திருடுகிறார்களே என்று நொந்து கொண்டார் அவர். ஏனெனில் முடியும் தருவாயில் இருந்த அதனை அவரே பணம் போட்டு முடித்துக் கொடுத்தார்.

## துரோகத்தனம்

இவர்கள் அந்தத் தூபிக்குச் சேர்த்த பணம் ரூ.80 இலட்சங்கள். இவரைப் பற்றி இன்றைய அரசியலில் இருப்பவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. தமிழ் நாட்டில் இருக்கும் தலைவர்களுக்கும் தெரியாது. ஈழத் தமிழர்களைச் சுரண்டி, ஏமாற்றியது மட்டுமல்ல. இந்தியத் தமிழ் இளைஞர்களையும் ஏமாற்றிச் சுரண்டுகிறார். உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். ஜெகன்நாதன் என்று தமிழகத்து இளைஞர் ஒருவர், இவரிடம் ஐந்து ஆண்டுகள் பணி செய்தார். கடந்த வருடம் திருமணத்திற்கு ஏற்பாடு செய்து, சச்சிதானந்தனையும் திருமண விழாவிற்கு அழைத்திருந்தார் ஜெகன்நாதன். சச்சியும் திருமண விழாவிற்குச் சென்று வாழ்த்திவிட்டு வந்து விட்டார்.

லீவு முடிந்து, மனைவியையும் சென்னைக்கு அழைத்து வந்து விட்டு, வேலைக்காக சச்சியின் ''காந்தளகம்'' வந்தார் ஜெகன்நாதன். இரண்டு மணி நேரம் காத்திருந்தவரிடம் வெளியே வந்த சச்சி ஆச்சரியமாய்ப் பார்த்து என்ன விசயமாய் வந்தீர்கள் என்று கேலியாகக் கேட்டுள்ளார். ஜெகன் நாதனும் பணிவுடன் வேலைக்குத்தான் வந்துள்ளேன் ஐயா என்று கூறியுள்ளார். அப்படியா, நீங்கள் லீவு எடுத்த நாளிலிருந்தே உங்களை நிறுத்திவிட்டாச்சுதே. அந்த இடத்திற்கு வேறு ஒரு ஆளையும் அமர்த்தியாகிவிட்டது. எனவே நீங்கள் சென்று வாருங்கள் என்று அதே கூளைக் கும்பிடு போட்டுவிட்டு சென்று விட்டார் சச்சி.

நினைத்துப் பாருங்கள், அந்த இளைஞனின் நிலையை! திருமணமும் செய்து மனைவியையும் சென்னைக்கு அழைத்து வந்து மறுதினமே வேலைக்கு வர வேலை கிடையாது போய்வா என்று கூற யாருக்காவது

8 ஆம் பக்கம் பார்க்க

www.padippakam.com



7 ஆம் பக்கத் தொடர்ச்சி ...

மனசு வருமா? வந்தது சச்சிக்கு! பழைய சினிமாக்களில் வரும் வில்லன்களின் மனசு சச்சிக்கு! எதற்காக தன்னை வேலையை விட்டு நீக்கினார் சச்சி என்பது அந்த இளைஞருக்குத் தெரியாது. சச்சிக்கு மட்டும் தெரிந்த காரணம் உண்டு. அவர் கொடுக்கும் சம்பளம் தமிழக தொழிலாளர் சட்ட வரம்புக்குக் குறைவானது மட்டுமல்ல. தொழிலாளர் நலன் P.F. நிதி எதற்கும் பணம் கட்டுவதில்லை. ஐந்து வருடங்கள் வேலை செய்த ஜெகன்நாதன் தொடர்ந்து இருந்தால் பாக்கிப் பணம் பெரும் தொகை கட்ட வேண்டிவரும் என்று கணக்குப் பார்த்து எதிர்கால கனவுகளுடன் வந்த இளைஞரது வாழ்வைக் கெடுத்தவர் இப்பெருமான்.

தமிழக இளைஞர்களுக்கு மட்டும் இப்படிச் செய்தார் என்றில்லை. இலங்கை திருமலையைச் சேர்ந்த செயராச சிங்கம் அகதியாக இந்தியா வந்து சச்சியிடம் வேலைக்குச் சேர்ந்தார். காந்தளகத்தில் செருப்புத் தேய வேலை செய்தார். இதே அலுவலகத்தில் சோபனா தேவி என்ற ஈழப் பெண்ணும் வேலை பார்த்தார். தன்னுடைய அலுவலகமாக நினைத்து இருவரும் சோர்வு கொஞ்சமும் இல்லாமல் உழைத்தனர். ஒருநாள் காந்தளகத்துக்கு தொழிலாளர் நல வாரிய அதிகாரிகள் வந்தனர். சம்பளம் மிகக் குறைவாக கொடுக்கப்படுவதை அறிந்தனர். செயராச சிங்கத்துக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுவதாகக் கூறி, மிகுதியை பழைய திகதியில் இருந்து கொடுக்கும்படி கட்டளையிட்டனர். வெள்ளிக்கிழமை செயராச சிங்கத்தை சச்சி கூப்பிட்டு ஒரு பத்திரத்தில் ஒப்பம் வாங்கினார். அது பழைய சம்பள மிகுதித் தொகையை பெற்றதாகக் கூறும் பத்திரம். ஆனால் அதிலெழுதப்பட்ட தொகையில் 1 பைசா கூட அவருக்கு கொடுக்கப்படவில்லை. இதே செயராச சிங்கம் சோபனாதேவியை விரும்பி கல்யாணம் செய்ய இருக்கிறார் என அறிந்து இவர்களை வேலையிலிருந்தே அந்த மாதச் சம்பளமே கொடுக்காமல் நிறுத்தி விட்டார் சச்சி. இவை எல்லாம் சமூக சேவை என்று எண்ணியுள்ளார் சச்சி.

இதே வரிசையில் ரவி, பற்றிமாகரன் என்று ஏராளம் ஈழத்தவர். இளம் பெண்கள், இளைஞர்களைக் கண்டாலே ஓர் மன நோயாளி போல் நடந்து கொள்வார். ஐயோ பாவம் இவர் என்றும் கூற முடியாது. ஏனெனில் இவரது கட்டுரை ஓர் திட்டமிட்ட செயலாகவே தெரிகிறது.

ஆதரவற்ற ஈழ இளைஞர்கள் சிலர் செய்தது தவறு களே! ஆனால் நீ செய்த இவைகள்தான் சமூக விரோதச் செயல்கள். எந்தத் திருடனுக்கும் கூட இந்த எண்ணம் வராது. இவரது அச்சகத்தில் பணிபுரிபவர்களிடம் வினவினால் இந்தத் திருடனின் திருட்டுப் பற்றி கதை கதையாய்க் கூறுவார்கள். இக்கதைகளைப் பின்னர் பார்க்கலாம்.

ஈழத் தமிழர்கள் வாழும் நாடுகளில் பத்திரிகை வாயிலாக புலிகளின் ஆதரவாளன் என்று காண்பிப்பார் இவர். கொழும்பு சென்றால் தங்குவது E.P.D.P. தலைவர் டக்ளஸ் தேவானந்தேயுடன். போக்குவரத்துச் செலவுகள் அனைத்தையும் டக்ளசே கவனிப்பார். அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார் சச்சி தன்னுடைய ஆதரவாளன் என்று.

இவர் வியாபாரம் செய்வதோ M.D. குணசேனா என்ற சிங்கள இனவெறி நிறுவனத்துடன். தமிழகத்தில் உள்ள இந்து முன்னணி மற்றும் சமயம் சார்ந்த அமைப்புகளிடம் சென்று தன்னை ஓர் சமய பக்தனாகக் காண்பிப்பார். திராவிடக் கட்சித் தலைவர்களிடம் சென்று தூய தமிழில் பேசி தன்னை கடைந்தெடுத்த தமிழன் என்று காட்டிக் கொள்வார்.

ஆந்திரா நக்சலைட்டுகள், அசாம் தீவிரவாதிகளிடம் சென்று தன்னை விடுதலைப் புலிகளின் பிரதிநிதி என்று கூறி பேச்சுவார்த்தை வேறு நடத்தியுள்ளார். பம்பாயில் சிவசேனா தலைவர்களிடம் இதனையே கூறி தன்னை இந்தியாவில் இருக்கும் ஈழத் தமிழர் தலைவன் என்று பெருமைபட்டுக் கொள்வார். சுருக்கமாகச் சொன்னால் மூளை குளம்பிய சுயநலக்கார விளம்பரப் பிரியர் இவர்.

தமிழ் மக்களை மூன்றாகப் பிரித்துள்ள இவர் தனக்கு மட்டும் நான்கு பெயர்களை வைத்துள்ளார். பத்திரிகைகளில் ''க.சச்சிதானந்தன்'', வெளிநாட்டுப் பத்திரிகைகளிடம் ''மறவன் புலவு - சச்சிதானந்தன்'', பெட்டிசன் அடிப்பது, அவதூறுக் கட்டுரைகள் எழுதும்போது ''கதிர் காமர்'', இரகசிய விடயங்களுக்கு சுங்க வரிகள் ஏய்ப்புக்கு ''சச்சி'' இப்படி இவரது பணிகள் நான்கு வகைப்படும்.

என்ன செய்வது, ஈழத் தமிழருக்கு வந்த தலைமைப் பஞ்சம் சச்சி போன்ற வியாபாரிகள் எல்லாம் தலைவர்களாகி ஒழுக்கங்கள் பற்றி பேசுகின்றனர். ஈழத் தமிழரை வெறுக்கும் எந்த இந்தியனும் இது போன்ற ஓர் எண்ணத்தைக் கொண்டதில்லை. உன்னுடைய திருட்டு வியாபாரங்கள் பற்றி நிறையவே எம்மிடம் உண்டு. கூவம் எப்படியென்று நம்மவருக்குத் தெரியுமல்லவா, இவரது சகோதரி மகனிடம் கேட்டால் தெரியும் இவருடைய காருண்யம் பற்றி. வேண்டாம் இப்போதைக்கு அவை. ஈழத் தமிழனாகிய நீ அவதியுற்றிருக்கும் எங்கள் மக்களை மேற்கொண்டு இழிவுபடுத்தும் பணியினை செய்யாதிருக்கும்படி உன் போன்றோ வளைந்து வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உன் மோசடி வியாபாரத்தை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தாலே நிறையப் பணம் கிடைக்கும். ஈழத் தமிழரை இனியொரு தடவை புண்படுத்தாதே.

நன்றி

இவ்வண்ணம்
பிஞ்ஞுகன்

மட்டமான குணங்களையுடைய இப்படியான நபர் ஒருவருக்காக எங்கள் இதழின் இரண்டு பக்கங்களை வீண் செய்துள்ளோம் என்பதை நினைக்க வேதனைதான். ஆனால் இந்நபர் பல பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் வழியாக தன்னை ஈழத்தமிழரின் பரிசுத்தமான ஓர் ஆலோசகராகக் காண்பித்து எங்கள் மக்களுக்கு பெருந்தீங்கினை ஏற்படுத்துவதைத் தடுக்கவே இந்தப் பக்கங்களை ஒதுக்கியுள்ளோம்.

---

# வாசகர் கண்ணோட்டம்

**''அன்பின் தோழா'' என்ற தலைப்பில் ஓர் கடிதம் கும்மிடிப்பூண்டி முகாமில் இருந்து எங்களுக்குக் கிடைத்தது. கையொப்பமோ, பெயரோ குறிப்பிடாமல் வந்த இந்தக் கடிதத்தினைப் பிரசுரித்துள்ளோம். ஏனெனில் போராளியாக இருந்த தோழன் தன்னுடன் இணைந்து போராடிய பழைய தோழனுக்கு நினைவுபடுத்தியுள்ளார். அதுமட்டுமின்றி திசை தெரியாமல் தவிக்கும் கொழும்புத் தமிழ்த் தலைவர்களின் தவறான வழிகாட்டுதலை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். அதனால் இதனை வெளியிட்டுள்ளோம்.**

**இலங்கையில் ஈழம் வேண்டி சிங்கள ராணுவத்துடன் இணைந்து போராடும் தோழனுக்கு.**

அன்பின் தோழா!

தற்போது உன் நிலை பற்றி எண்ணும்போது மிகவும் வேதனையடைகின்றேன். தமிழனுக்கு தமிழீழம் தான் ஒரே வழி எனக் கூறிய உனது தலைவர்கள் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

சிங்கள அரசுடன் சேர்ந்து எம்மக்களுக்கு ஈழம் பெற்றுத் தர முடியுமா? அல்லது உனது இதயக்கத்தில் ஈழம் வேண்டி காவு கொடுத்த இளைஞர்களினதும் யுவதிகளினதும் உயிர்களை மீட்டுத் தரத்தான் முடியுமா? அல்லது உமது தலைவர்கள் வெளியிடும் பத்திரிகைகளில் ஈழத்துக்கு ஆதரவான கருத்துக்களையாவது வெளியிட முடியுமா? அவர்களால் இப்போதும் முடியாது. இனி எப்போதும் முடியாது.

அவர்கள் பொறியில் அடிபட்ட எலி. இருந்தாலும் மரணம் விடுபட்டாலும் மரணம். உனது ஸ்தாபனத்தை உருவாக்கிய தலைவர்கள் அமரர்கள் ஆகிவிட்டனர். அவர்கள் எமது மக்களுக்கு விமோசனம் தரக்கூடிய கொள்கையுடனும் உறுதிப்பாட்டுடனும்தான் உனது ஸ்தாபனத்தை வளர்த்தார்கள், உருவாக்கினார்கள். அதனால்தான் உனது ஸ்தாபனத்தின் பெயரில் ஈழம் என்ற சொல் ஒட்டிக் கொண்டது. தற்போதைய உனது தலைவர்கள் அச்சொல்லை உச்சரிக்கவே பயப்படுகின்றனர். எந்த எதிரியை உன் துப்பாக்கி குறி பார்த்ததோ அந்த எதிரியுடன் கைகோர்த்து நிற்கின்றாய்: உன்னை துப்பாக்கி ரவைகளாக பாவித்து எமது மக்களை அழிக்கின்றனர் தோழா! இதுதான் அரசியல் தந்திரம் என்றோ, யுத்த யுக்தி என்றோ கூறி இன்னும் மக்களை ஏமாற்ற முடியாது. உனது வரலாற்றை புரட்டத் தொடங்கி விட்டனர் மக்கள். பசி வந்திடப் பத்தும் பறக்கும் என்பதற்கு உன் தலைவர்கள் முன் உதாரணம்.

இந்நிலையில் உன் நிலைப்பாடு என்ன, நீ என்ன செய்யப் போகிறாய், எதிர்காலம் என்ன ஈழ வரலாற்றில் களங்கமாக உன் பெயர் வரவேண்டுமா? நீயே சிந்தித்துப் பார்.

அன்று (1987—1990) விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடன் சேர்ந்து எங்களைத் தாக்குகின்றனர் எனக் கூக்குரல் இட்டாயே அன்று அவர்கள் செய்தது துரோகம் என்றால் இன்று அதே காரியத்தை நீ செய்கின்றாய் இது எந்த வகையில் நியாயம்? இதை ஆரம்ப காலத்தில் செய்திருந்தால் பல உயிரிழப்புக்களையும் சொத்து இழப்புக்களையும் தவிர்த்திருக்கலாமே. இன்று மீண்டும் விடுதலைப் புலியினர் சிங்கள அரசிற்கு எதிரானவர்கள். ஆனால் நீயோ எங்கள் எதிரிக்கு நண்பனாகி விட்டாய். சிங்கள இராணுவத்தை மீறி ஒரு அடிகூட நகர முடியாது. இன்று உதாரணத்திற்கு சிங்கள அரசு உன் தலைவர்களில் ஒருவரான EPDPயின் தலைவருக்கு நிகழ்த்திக் காட்டியுள்ளது. தோழா! இன்று உனக்குக் கிடைத்திருக்கும் விடுதலைச் சலுகைகள் எதுவும் நிரந்தரமானவைகள் அல்ல. குறுகிய காலத்திற்குள் முடிந்துவிடும். அதன் பின் மீண்டும் உன் சந்ததியினர் அடிமைகள் என்பதை மறந்துவிடாதே. தமிழர்களின் வரலாற்றில் தமிழன் காவியமாகவும் இருந்திருக்கின்றான், களங்கமாகவும் இருந்திருக்கிறான். நீ உன்னை எந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப் போகிறாய்? சிந்தித்துப்பார்!

உலகின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்தக் குழுவும் எதிரியுடன் கூட்டுச் சேர்ந்து தன்னினத்துப் போராளிகளை அழித்ததில்லை என்ற சங்கதியை அன்று உன் தலைவர்கள் உனக்குப் போதித்திருப்பார்களே. அதை நீயும் மறந்து விட்டாயா? அன்று எம்மக்கள் உனக்கு சோறு போட்டு அவர்கள் பட்டினி கிடந்தனரே! அன்று எம்மக்கள் உனக்கு தூங்க இடம் கொடுத்து அவர்கள் விழித்துக் காவல் புரிந்தனரே! அன்று நீ செல்லும் வழிகளில் இராணுவம் வருகின்றதா என்று துப்பறிந்து கூறினரே! இவைகளை எதற்காகச் செய்தனர். நீ இராணுவத்துடன் சேர்ந்து கைகோர்த்துப் போராடவா? இல்லை!

உன்னால் எமக்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கை! ஒரு நப்பாசைதான்! நீ சாப்பிட்ட வீட்டுக்காரர்களையும் உனக்கு அடைக்கலம் கொடுத்த அயலவரையும் சிங்கள இராணுவம் சிறையிலடைத்து சித்திரவதை செய்தார்களே! எல்லாவற்றையும் மறந்து விட்டாயா! நீ மறந்தாலும் அவர்கள் அழிந்தாலும் அவர்களின் சந்ததியினர் உன்னை மறக்கப் போவதில்லை. வளரும் சமுதாயம் ஈழ வரலாற்றில் உன்னைப் பற்றி அறிந்து கொள்ளும் என்பதை மட்டும் மறக்காதே.

தகப்பனை (தலைவனை) இழந்த பிள்ளைகள் தறி கெட்டுப் போகும் என்ற சொல்லின்படி உன்னை மன்னித்தால் உண்டு. இன்னும் காலம் கடந்து விடவில்லை. உனது சந்ததியினருக்கு ஏதாவது செய்ய நினைக்கின்றாயா?

தலைவனை இழந்து தடுமாறும் தோழனே இக்கால கட்டம் விடுதலைப் போராட்டத்தின் முடிவல்ல.

உன்னையே நீ திடப்படுத்திக் கொள்.
புதிய விடிவெள்ளி ஒன்று
புது விடியலுக்கு
உன்னை அழைத்துச் செல்லும்.



நீ இக்கடிதத்தைப் படித்தவுடன் என்னைப் பற்றி அறிய ஆசைப்படுவாய்.

ஆனால் அதுவல்ல முக்கியம் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதே முக்கியம். உணவுக்காக, பணத்திற்காக, உடைக்காக, வேறு வசதிகளுக்காக உன் தவறான தலைவர்களின் வழிகாட்டுதலுக்கு இரையாகி, ஐயோ! எம் இனத்தை வீழ்த்தி விடாதே! வீழ்ந்தால் எம்மால் எழுந்திருக்கவே முடியாது. ஏனெனில் நாங்கள் அந்நாட்டின் சிறுபான்மை இனம் என்பதினை எண்ணிப் பார். நீ உணர்ந்தால் போதும்.

**இவண்ணம்**
**உன்னுடன்**
**''களத்தில் நின்றவன்''**

**தத்துவம் இல்லாத நடைமுறை குருடு. நடைமுறை இல்லாத தத்துவம் பிணம்.**

படிப்பகம்

www.padippakam.com



# அவல நிலையிலும் அதி சிறந்த வாழ்வு வாழும் ஈழத்து அகதிகள்

அகதிகளாக வந்து விட்டாலும் 'தன் மானத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது என்கிற உயர்ந்த நோக்கம் ஈழத் தமிழ் மக்களிடையே இருந்துதான் வருகின்றது. இதற்கு ஈடாக ஒரிஸ்ஸா மாநிலத்தில் சுமார் ஆறு வருடங்களாக குடியிருந்துவரும் ஈழத் தமிழர்கள் அப்பகுதி மக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகின்றனர். வீட்டுத் தோட்டம், பயிர்ச் செய்கை, சுய தொழில் போன்றவற்றைச் செய்து தங்களது மேலதிக செலவுத்தானங்களை சரி செய்து வருகின்றனர். இவர்களின் முன்மாதிரியைக் கடைப்பிடித்து அப்பகுதி மக்களும், படித்த இளைஞர்களும் சோம்பலை விரட்டி அடித்து பயிர்ச் செய்கைகளில் புதிய உத்வேகம் பெற்று வருகின்றனர். ஒரிஸ்ஸா மாநிலத்தில் மல்கன்கிரி என்னுமிடத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் ஈழத்தமிழர்களின் தமிழ் முகாம் அமைந்துள்ளது.

ஜேர்மனி, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் பார்வையிடும் முக்கிய இடங்களில் ஒன்றாக தமிழ் முகாமையும் தேர்ந்து எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் ஊக்குவிப்பால் சுமார் 100 ஏக்கர் நிலத்தில் உயர்ரக வாழைகள் பயிரிட்டும், 50 ஏக்கர் நிலத்தில் ஏனைய உப உணவுப் பொருட்கள் பயிரிட்டும் செழிப்பான நிலையினை அடைந்து ஈழத்தமிழ் அகதிகளான எம் மக்கள் அப்பகுதியில் பிறரை எதிர்பாராது அதிசிறந்த முறையில் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை மண்ணில் பட்டு அனுபவித்து வந்த பல்வேறு அவல நிலையிலும், இந்தியாவில் அரசு அளிக்கும் பற்றாக்குறையுடனான மானியத்தின் அவல நிலையிலும் அதிசிறந்த வாழ்வு வாழும் அப்பகுதி ஈழமக்கள் இந்தியாவில் வாழும் அனைத்து அகதிகளையும் மிஞ்சி ஓர் உயர் வாழ்வை உழைப்பின் மூலம் எடுத்துகாட்டியுள்ளனர். இத்தனைக்கும் ENDLF ஸ்தாபனம் கல்வி, வேலை வாய்ப்பு, கலை, கலாச்சார மேம்பாடு குறித்து தம்மால் ஆன பணிகளைச் செய்கின்றது.

கர்நாடகா மாநில பெங்களூரில் ஈழ அகதிகளுக்காக பெரிய கல்வி நிலையத்தை நடாத்தி வரும் ENDLF ஸ்தாபனத்தினர் ஒரிஸ்ஸா மாநிலத்திலும் எம்மவரின் பிள்ளைகளின் ஆரம்பக் கல்வி நிலையத்தினையும் நடாத்தி வருகின்றனர். அத்தோடு மக்கள் வேறுபாடின்றி அங்குள்ள மலைவாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாயிருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும். இதைக் கண்ணுற்ற அந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியர், நகர முதல்வர், பொலிஸ் அத்தியட்சகர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என்று முக்கிய பிரமுகர்கள் தமக்குள் பிரமிக்கும் வகையில் தமிழ் முகாம் செம்மையாக நடந்து வருவது பாராட்டுக்குரியது.

தம் சொந்த மக்களுக்கு மட்டுமின்றி ஏனைய மக்களும் பயன் பெறும் வகையில் ENDLF ஸ்தாபனத்தினரின் சேவை தமிழ்நாடு, கர்நாடகா, ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களையும் தழுவி பரவலாக்கப்பட்டுள்ளமை இன்னொரு வியக்கத்தகு அம்சமாகிறது. இதற்கேற்றாற்போல் ஒரிஸ்ஸா மாநிலத்தின் மல்கன்கிரி மாவட்டத்தில் காலரா நோயினால் அவதியுற்ற ஆயிரக்கணக்கான மலைவாழ் நோயாளிகளை குணப்படுத்தும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அம்மாவட்ட நிர்வாகிகளுடன் துணைபுரிந்து திறம்பட சேவையாற்றி பாராட்டினைப் பெற்றதும் ENDLF ஸ்தாபனத்தினரேதான். கூட்டுறவு முறையில் கடை வைத்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எம்மக்கள் நியாய விலையில் பொருள்களை விற்றும் அப்பகுதி மக்களின் நன் மதிப்பையும் பெற்று வருகின்றனர். அப்பகுதி மக்களைப் போல் இந்தி, ஒடியா, பெங்காளி ஆகிய மொழிகளை சரளமாகப் பேசி அங்குள்ள அனைத்து மக்களுடனும் அன்யோன்ய உறவை வளர்த்துக் கொண்டதிலும் வியக்கத்தகு சிறப்பினை எம்மகள் பெற்றுள்ளனர். ''பாச உணர்வுப் பகிர்வுக்கு சாதி, மத, இன, மொழி வேறுபாடு ஒரு பொருட்டே அல்ல'' என்பதை எம்மக்கள் அங்கு நிரூபித்து வாழ்கின்றனர்.

''இடம் எதுவெனினும்,
தளர் நடை வரினும்
தொடர் நடை புரிவான் தமிழன்''

எனச் சிறப்பாக வாழும் அவ் ஈழத் தமிழ் அகதிகளை ஏனைய அகதி முகாம் மக்களும் பின்பற்றி நம் நாட்டுக்குப் பெருமை சேர்ப்போமாக.

இந்த உழைப்பும், சேவையும் எம் சொந்த மண்ணில் இடம் பெற வேண்டியது.ஒற்றுமை என்னும் சொல்லை எங்கள் இனம் குழி தோண்டிப் புதைத்து விட்டதால் அரவணைத்த மண்ணில் இப் பணிகள் தொடர்கின்றது.



ஒரிஸ்ஸா மாநிலத்தில் மல்கன்கிரி என்னுமிடத்தில் ஈழத் தமிழ் சிறார்களின் ஆரம்பப் பள்ளியின் ஒரு பிரிவு மாணவர்கள். இப்பாடசாலை ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியால் நடத்தப்படுகின்றது.



ஒரிஸ்ஸா ஈழ அகதிகள் நிலம் பண்படுத்தும்போது எடுத் த படம்.



ஒரிஸ்ஸா ஈழ அகதிகள் செய்த பயிரை அறுவடை செய்யும்போது எடுத் த படம்.

## தேவ மைந்தன் வருவான் மேய்ப்பனாய் அல்ல...

ஓ! பரலோகத்தில் இருக்கும்
எங்கள் பிதாவே!
கேளுங்கள் கொடுக்கப்படும் என்றீர்
கேட்கின்றோம்
எங்கள் உரிமைகள் இன்னும்
கொடுக்கப்படவில்லை...
தட்டுங்கள் திறக்கப்படும் என்றீர்
நாங்களும் தட்டுகின்றோம்
எங்கள் தேசத்தின்
சமாதானக் கதவுகள் இன்னும்
திறக்கப்படவில்லை...
தேடுங்கள் கண்டடைவீர்கள் என்றீர்
காலம் காலமாய்
நாங்களும் தேடுகின்றோம்
எங்கள் சமாதானப் புறாவை இன்னும்
கண்டுகொள்ளவில்லை...
ஓ! வான தேவனே
வாள் எடுத்தவன்
வாளால் மடிவான் என்றீர்
உன் ஆலயத்தில் மடிந்த
குழந்தைகள் என்ன
குண்டா ஏந்தினார்கள்...
ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தை காட்டு என்றாய்
மறு கன்னத்தையும் காட்டினோம்
இவர்கள்
முதுகிலும் அல்லவா குத்துகின்றார்கள்.
ஓ! எங்கள் பிதாவே
சீக்கிரமாய் வந்து விடு
மீண்டும் ஒரு
மேய்ப்பனாய் அல்ல, சுதந்திர
ஈழத்தை நேசிக்கும்
எம் இனத்தின் போராளியாய்...

பிரபஞ்சப் பிரியன்
— திருமலை —





ஈழ விடுதலைப் போராட்டத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் போராட்டம் தொடர்பான ஆலோசனைகள் ''ஈழ தேசத்திற்கு எழுதினால் தரமானவை பிரசுரிக்கப்படும்.

எமது நாளைய சமுதாயம் நேர்வழி செல்ல இன்று எம் மாணவர்களின் கல்விக் கண்களைத்திறப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



# எமது குரல்

## ஒன்று சேர்ந்தால் உருவாகும் ஈழம்

படுமோசமான இனக் கொலை உச்சகட்டமடைந்தபோது உலகம் முழுவதிலும் ஈழத் தமிழர்கள் இடம் பெயர்ந்து போயினர். போன இடங்களிலே அவர்கள் எத்தனையோ கஷ்டங்களைச் சந்தித்து வாழத் தொடங்கினர். தஞ்சம் புகுந்த நாடுகளிலே அவற்றின் குடிவரவு அகல்வுச் சட்டங்கள் அவர்களைப் படாதபாடு படுத்தின. இவற்றுக்கெல்லாம் சமாளித்து வாழத் தொடங்கியபோதும் தொல்லைகள் தீர்ந்து போய்விடவில்லை.

தற்போதைய சிங்கள அரசின் தந்திரமான பிரசாரங்கள், ஈழ அகதிகளுக்கு சங்கடங்களை உண்டாக்குகின்றன. இந்தவேளையில்தான் உலகமெல்லாம் விரட்டி அடிக்கப்பட்ட யூதர்களின் வரலாறு நினைவுக்குவருகிறது நாடோ, இருக்க சரியான இடமோ அற்றிருந்த அப்போதைய நிலையில் யூதர்கள் என்ன செய்தார்கள்? அப்போதைய நிலையிலே உலகமெல்லாம் சிதறியிருந்த அவர்கள், பொது நன்மை கருதி தங்களிடையே நாட்டின் எல்லைக்கோடுகள் தாண்டிய உறவினை உருவாக்கிக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் அணைத்து, தமது கஷ்டங்களை தீர்க்கும் முயற்சிகள் செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக தமக்கென வங்கி ஒன்றையும் உருவாக்கினர். அதுமட்டுமல்ல, அமெரிக்காவில் ஒரு யூதனுக்கு ஏதாவது கஷ்டம் ஏற்படுத்தப்பட்டால் உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள யூதன் அவனுக்காகக் குரல் எழுப்பினான். தமது இனத்தவருள்ளே ஏற்படும் நெருக்கடிகளைக் கூட வெளியே தெரியாமல் தமக்குள்ளேயே பேசி சுமூகமாக தீர்த்துக் கொண்டனர். யூத இனப் பெருமையைப் பற்றி மட்டுமே பேசினார்கள். இந்தக் கட்டுப்பாடுதான் அவர்களை தனித்தன்மை கொண்ட வல்லமையான இனமாக மாற்றி அமைத்தது. உலகில் இன்று யூதர்கள் தலைசிறந்து இருக்கிறார்கள். யூத இனத்தின் அழிவு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனால், ஈழத் தமிழனின் அழிவு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

சொத்து, சொந்தம், பிறந்த பூமி எல்லாம் இழந்து, போன நாடுகளில் இப்போதும் கஷ்டமான சூழ்நிலையில் வாழும் இவர்களுக்கு இப்போதும் ஒரே கருத்து இல்லை, வழிகாட்டி இல்லை, வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் மனப்பாங்கும் கிடையாது. இதைவிடக் கொடுமை வேறு என்ன? இதனால்தான் அகதிகளாய் வாழும் நாடுகளிலும் ஈழத் தமிழனுக்கு தொடர்ந்தும் நெருக்கடி, அவமதிப்பு, நாடு கடத்தும் அபாய நிலை உருவாக்கம் நடக்கிறது.

இவை எல்லாவற்றையும்விட இப்போது புதிய அபாயம் ஒன்றும் தோன்றியுள்ளது. அகதிகளாய் உள்ள தமிழருக்காக சரியாகவும், பொது நலப் போக்கிலும் பேசத் தகுதியானவர் இல்லாமல் போய்விட்டனர். இதனால் ஈழத் தமிழர் அநியாயமாகக் காட்டிக் கொடுக்கும் நிலைமைக்கு தள்ளப்படும் பேராபத்து உண்டாகியுள்ளது. தகுதியானவர் முன்வராததால் அந்த இடத்தை சுயநலமிக்க கோடரிக்காம்புகள் இலகுவாகவே அடைந்துவிட முடியும். தமது வங்கிக் கணக்கை வேகவேகமாய் உயர்த்த இனத்தை அவமானப்படுத்தி, பிறருக்கு விற்கும் அற்பர்கள் முன்னிடம் பெறலாம். உதாரணத்திற்கு இந்தியாவில் வாழும் ஈழத்தவரிடையே சச்சிதானந்தன் என்பவர் புல்லுருவியாகத் தோன்றி ஈழத் தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ''சமூகவிரோதிகள்'' என்று அறிக்கை விடும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

இச்செயலுக்கான காரணம் ஈழத்தவர் பக்கமே உண்டு. எந்தவொரு நாட்டிலாவது ஈழத் தமிழர் ஒன்றுபட்டு வாழ்கின்றனரா என்றால் கிடையாது. நாட்டு நடப்புகள், ஒன்றுபட்ட கருத்துக்கள், நாட்டுக்குநாடு தொடர்பு, வசதியானவர்கள் வசதியற்றவர்களுக்கு உதவுதல் இப்படி எதுவுமே கிடையாது. உலகில் எத்தனையோ நாடுகள் அகதிகளாக எம்மவரை ஏற்றுக் கொண்டுள்ளன. இவற்றில் மிகவும் தாழ்ந்த நிலையில் முகாம்களில் வாழ்க்கையை நடத்துபவர்கள் இந்தியாவில் வாழும் ஈழத்தமிழ் மக்கள்தான். இவர்களது வாழ்வில் எதிர்கால சுபிட்சம் என்பதே கிடையாது. எத்தனை நாடுகளில் எம்மவர்கள் இலட்சாதிபதிகளாக வாழ்கின்றனர். எத்தனை குடும்பங்கள் சாயிபாபாவைத் தரிசிக்க இந்தியா பயணிக்கின்றனர். இவர்களில் ஒருவர் கூட எங்கள் அகதிகளைத் திரும்பிப் பார்ப்பது கிடையாது. கல்வியில் இருந்து அனைத்து அத்தியாயத் தேவைகளிலும் புறக்கணிக்கப்பட்டுள்ள இனம் ஒன்று உண்டென்றால் அது முகாம்களில் வாழும் எங்கள் ஈழ அகதிகள்தான். அனைத்துக்கும் அரசையே எதிர்பார்த்திருப்பதன் விளைவுதான் இது. இலட்சாதிபதிகளும், சாயிபாபா பக்தர்களும் தர்மம் பண்ணியிருக்கலாம் என்று நாம் கூறவில்லை. ஈழத் தமிழர்களிடத்து தொடர்புகள், ஒன்றுபட்ட அமைப்புகள், சமூகப் பணி தொடர்புகள், கல்வியையோ, எங்கள் பண்புகளைப் பேணிப் பாதுகாக்கவென கூட்டு நடவடிக்கையோ எதுவுமே கிடையாது. இவற்றினை ஏற்படுத்த வேண்டும் என்பதே எங்கள் கருத்து. பஞ்சமல்ல, பயம்தான் பல பணிகளைத் தடுத்துள்ளது.

நாங்களாக எங்கள் இனத்தை சீர்படுத்த, வழி நடத்த முன்வராத பட்சத்தில் சச்சி போன்ற தீய வியாபாரிகள் ஒவ்வொரு நாட்டிலும் எம்இனத்தை விற்றுவிடுவார்கள். எனவே இனியும் காலம் தாழ்த்தாது ஈழத்தவரின் வாழ்வினை சீர்படுத்த என்று, நல்வழியில் ஓர் அமைப்பினை ஏற்படுத்துதல் சிறந்தது.

## புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் தயார்!

மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று புலிகள் அறிவித்துள்ளனர். பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதும் அதனை முறித்துக் கொள்ளுவதும் வழக்கமான ஒன்றுதான்.

திம்புவில் ஆரம்பித்த பேச்சுவார்த்தை முறிந்து முறிந்து தேய்ந்தே போய்விட்டது. இப்போது என்ன பேச்சுவார்த்தை வேண்டிக்கிடக்கிறது. யாழ்ப்பாணத்தை அடித்துப் பிடிக்க வேண்டியதுதானே!

எங்களால் எல்லாம் முடியுமென் கூறித்தானே, கூட இருந்து போராடி அனைவரையும் கொன்று தீர்த்தீர்கள். யாழ் நகரை விட்டு இராணுவம் வெளியேறினால் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று பகிரங்கமாக அறிவிக்கிறீர்கள் ஆகவே உங்களால் யாழ்ப்பாணத்தை மீட்க முடியாது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதற்காகவா அன்று ஏனைய அனைவரையும் கொன்று தொலைத்தீர்கள்.

இன்று என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதாவது தெரிகிறதா? ஆறாம் வகுப்புக்கு மேல் பாடசாலைச் சிறுவர்களை சண்டைக்கு அழைத்து முன் நிலையில் நிறுத்துகிறீர்கள். மாணவர் சமுதாயம் அழிந்து போவதை அறியவில்லையா? ஏன் இந்தப் பஞ்சம் வந்தது என்று இன்னுமா நீங்கள் யோசிக்கவில்லை?

சந்திரிகாவுடன் என்ன தமிழீழம் பற்றியா பேசப் போகிறீர்கள்? கொழும்பில் இதற்கெனவே ஏழுக்கு மேற்பட்ட கட்சிகள் வரிசையாக நின்று போட்டி போடுகின்றன. அவர்களுக்கு வீடுகள் கொடுத்துள்ளார் சந்திரிகா. உங்களுக்கென்றால், ஐந்து நட்சத்திர கோட்டல்கள்தான் பிடிக்கும் என்பது சிங்களவருக்குத் தெரியும். முன்பும் அப்படி ஏற்பாடுகள் செய்து தந்தவர்கள்தானே!

இதற்காகப் பேச்சுவார்த்தை என்று காலத்தை ஓட்டப் போகிறீர்களா? உண்மையைப் பேசி ஒன்று சேர்ந்து போராடி ஈழத்தை மீட்க முயற்சி செய்யுங்கள். அதை விடுத்து வீரம் பேசி மிஞ்சியிருக்கும் இடத்தையும் கோட்டைவிட்டு தீராத பழியினைச் சுமக்காதீர்கள்.

## கிளிநொச்சி மாவட்டக் காடுகள் அழிப்பு

இடம் பெயர்ந்த யாழ்மக்கள் குடியிருக்கவும், விவசாயத்தினை மேற்கொள்ளவுமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துக் காடுகளும் அழிக்கப்பட்டுவிட்டன.



விவசாயத்திற்கான பசளைகளை அரசு அனுப்பாததால், பழைய நிலங்கள் கைவிடப்பட்டு, காடுகளை அழித்து புதிய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படுவது வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு நல்லதல்ல.

## மஞ்சரிப் பத்திரிகை மீது தாக்குதல்

எங்கள் மக்கள் 1986ல் வாய் மூட ஆரம்பித்தவர்கள் இன்னும் திறக்கவில்லை. மெதுவாகத் திறக்க ஆரம்பித்ததும் அராஜகம் அடக்குகிறது. புலிகளை விடப் புலிகளின் ஆதரவாளர்கள் செய்கின்ற அநியாயங்கள் தான் அதிகமானது.

கனடாவில் வெளிவரும் ''மஞ்சரி'' பத்திரிகையின் விற்பனையாளர்களைத் தாக்குவதன் மூலம் புலிகளது அராஜகக் கொள்கை நியாயமானதாகிவிடாது. இது புலிகளை மட்டும் பாதிக்கும் செயல் அல்ல. எங்கள் மக்கள் அழிக்கப்படும்போது அதனைப் பார்த்துக் கொண்டு உலகமே மௌனமாக இருப்பதற்கும் காரணம் இதுபோன்ற பயங்கரவாதச் செயல்களே அல்லாமல் வேறல்ல.

சிங்கள இராணுவம் அட்டூழியம் செய்கிறது என்று உலகிற்கு நாம் சொல்கின்றோம். புலிகள் என்ன தர்மமா செய்கின்றனர்? என்று எம்மைப் பலரும் கேட்கின்றனர். அவற்றுக்கு காரணங்கள் பலவுண்டு. கொள்கைகள் என்று தமிழ் மக்களுக்கு எதுவும் இருக்கக்கூடாது. ஆலோசனை, எதிர்க்கருத்து, மாற்றுக் கருத்து, அபிப்பிராயம், திருத்தம் எதற்கும் தமிழ் மக்களுக்கு உரிமையில்லை. இவைகள் அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளன. மீறுபவர்கள் தண்டனைக்குள்ளாக்கப் படுவார்கள். இதுவே புலிகளால் எழுதப்பட்ட தமிழருக்கான தீர்ப்பு.

இதனால் பாதிப்பு யாருக்கு? தமிழீழத்துக்குத்தான்! தமிழ் மக்கள் பக்கம் இருக்கும் நியாயங்களை எடுத்துச் சொல்ல அனைவருக்கும் உரிமையுண்டு. புலிகளின் ஆதரவாளர்கள் இது போன்ற அடாவடித்தனங்களை [illegible]த்த வேண்டும். ஈழம் உங்கள் [illegible]களில் அடங்கிவிடாது. அது தொடர்பான பிரச்சனைகளை உலகம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. உங்கள் பயங்கரவாதச் செயல்கள் எமது ஈழக் கொகையினைத் தான் பாதிக்கிறது. எனவே இதுபோன்ற செயல்களை ஈழதேசம் வன்மையாகக் கண்டிக்கிறது.


ஆசிரியர் : சி. தயாபரன்
வெளியிடுபவர் : அ. குமரப்பன்
முகவரி : 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.




படிப்பகம்